REGD M 4642

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் --மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 7–11–48 | இதழ் 21

## "களத்திற்கே செல்"

[ எஸ். வி. வி. இராமன் ]

—❀—

"உலகமெலாம் தமிழ் மணக்கச் செய்வோ" மெ[illegible]
உத்தமனின் வழிவந்த அமைச்சரானோர்,
பல விதமாய்த் தமிழ்ப்[illegible]ன்பை, பாழ்படுத்தும்
பணிதனையே செய்[illegible]ர்; பார்த்து விட்டோம்.
விலகிநின்றோம்; இனிப்பொறுக்கோம்! வீணர் தங்கள்
வீண்செயலை வீழ்த்திடுவோம்! வெற்றி கொள்வோம்
கலையினை, நற்றமிழ்மொழியை, காத்து நிற்போம்.
கனலனைய தமிழ்வீரா! "களத்திற்கே செல்!"

'இந்தி'யெனும் மொழிதன்னை, இந் நாட்டிற்குள்
இயங்கவிடோம்; இது உறுதி; இயக்குவிப்போர்
செந்தமிழர் ஆனாலும், அவருக்கும், நாம்
நந்தமிழன் மொழிப் பற்றைத் தெரியவைப்போம்!
விந்தைமிகு "இலக்கியங்கள்" "விஞ்ஞானங்கள்"
'விதி'யில்லா ஒருமொழி, நம் பொது மொழியா?
அந்தோ! நம் தமிழ்ப் பண்பு அழிவதற்கு,
அனுகவிடோம் ஒருதீமை! "களத்திற்கே செல்!"

இமயங்கள் எதிர்த்திடினும், இறங்கி, எங்கள்
இன்னுயிராம் தமிழன்னை மானம் போக்கோம்!
சமயத்தில் சூழ்ச்சிசெய்யும் சழக்கர் தங்கள்
சதிச்செயலை முறியடிப்போம், சங்கொலிப்போம்!
இமயத்தில் கொடிகண்ட எங்கள் வீரம்
"இருக்குது பார், இறக்கவில்லை" என்று கூறி
இமயத்தின் ஆணைக்கு இறைஞ்சி நிற்கும்
ஏழைகளுக்குணர்த்திடுவோம், "களத்திற்கே செல்!"

# ஈரோடு
# நகராட்சி மன்றத்தாரின்
## வரவேற்பு

—✲—

“பூம்பொழில்கள் நிரம்பியதாய், நாகரிகம் மிளிர்வதாய், நல்லோரின் உரைகேட்கும் மன்றங்கள் கொண்டதாய் நகரங்கள் திகழ வேண்டும். நகராட்சி மன்றத்தார் இந்த நோக்கத்துடன் பணிபுரிவதே முறை” என்று, தமிழ்ப்பெரியார், திரு. வி. கலியாணசுந்தரனார், ஈரோடு, நகராட்சி மன்றத்தார் அளித்த வரவேற்புக்கு நன்றியுரை கூறுகையில், குறிப்பிட்டார்.

ஈரோடு, நகராட்சி மன்றத்தலைவர், திரு. வி. கலியாணசுந்தரனாரின், நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சீர்திருத்த வேட்கை ஆகியவற்றினைப் பாராட்டியும், அவருடைய புலமை நடையால் நாடு பெரும் பேற்றினைப் பெற்றதையும், போற்றிப்பாராட்டிடும், நல்வரவேற்பிதழை 24-ந்தேதி மாலை 5-மணிக்கு படித்தளித்தார்.

நகராட்சிமன்ற உறுப்பினர்களும், உள்ளூர்ப் பிரமுகர்களும், மாநாட்டுக்காக, வெளியூர்களிலிருந்து வந்திருந்தவர்களில் பலரும், நகராட்சி மன்ற மண்டபத்தில் குழுமியிருந்தனர்.

திராவிடர்கழக மாகாணத்தனி மாநாட்டுக்கு வந்திருக்கும் நாவலரே! தங்களுடைய சீரியபணியினால், திராவிடநாடு விடுதலை பெற்றுச் சிறந்து விளங்கும் என்று நம்புகிறோம்— என்று, நகரசபை வரவேற்பிதழில் பொறித்திருந்தது, குறிப்பிடத் தக்கது.

நகராட்சி மன்றத்தலைவர், உயர் திரு. சென்னியப்ப கவுண்டர் அவர்களையும், மன்ற உறுப்பினர்களையும், திரு. வி. க. அவர்கள் பாராட்டியதுடன், நகராட்சி முறைபற்றிய நல்லுரை சிலவும் கூறினார்.

“ரிப்பன்துரைகாலத்திலே, இத்தகு நகராட்சி மன்றங்கள் நிறுவப்பட்டன. இவைகள், ஜனநாயகப் பயிற்சிக்கூடங்கள்; நிர்வாகத்துறையிலே பயிற்சிபெறும் இடங்கள். இவைகட்கு, இன்றுள்ள அதிகாரம் போதுமானதாக இல்லை. வியன்னா, மாஸ்கோ, ஆகிய இருநகராட்சி மன்றங்களைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். வியக்கத்தக்க முறையிலே அங்கெல்லாம் நகராட்சி மன்றங்கள் பணிபுரிகின்றன.

நகராட்சி மன்றத்தார், நகரை அழகிடங்களாக்கப் பணிபுரிதல் வேண்டும். மேலைநாட்டு நூலாசிரியர்கள், மரங்களின் மூலம், மக்கள் பெறும் வாழ்க்கைவசதிபற்றிக்குறிப்பிட்டிருக்கிறார்கள். மரங்களின் பச்சிலைகளுடன் காற்றுத்தவழ்ந்து,வரல் வேண்டும்; அந்தக்காற்றினை நுகர்வதால், மக்களின் உயிர்ப்புக்குமிகுந்த உரமும் திறமும் விளையும் என்கின்றனர் அறிஞர்கள். இங்கோ, நகரங்களிலே, வரவர, மரங்கள் மறைந்து வருகின்றன. இங்கு மட்டுமல்ல, யான்வாழும் சென்னையிலே, பச்சை மரங்களைப் பார்த்தலே அரிதாகிவிட்டது. மரங்களை அழிப்பது கூடாது. நகராட்சியினர், அழகியபூம்பொழில்களை அமைத்தல்வேண்டும். அழகும், பயனும், இதனால் அதிகம் உண்டு. திருமூலர், தருக்களின்பயனைக்கூறியுள்ளார்.

நகரங்களிலே, சிசுக்களின் மரணம் அதிகம்—அதிகரித்தவண்ணமும் இருக்கிறது. பம்பாய் நகரத்திலே சிசுமரணம் எவ்வளவு அதிகமாக உள்ளதென்ற குறிப்பினைப் பார்க்கநேரிட்டது. உள்ளம்நொந்து போனேன். கருவிலேயே சிதைகின்றன கணக்கற்ற குழவிகள்—பெற்றோரின் உடற்கூறு இருக்கும் விதத்தினை விளக்குவதன்றோ இது. குழந்தைகளின் விஷயத்தைக் கவனிக்கவேண்டும். ஏழைக்குழந்தைகட்கும் சிறுருக்கும் ஆவின்பாலை அளிக்க, நகராட்சியினர், முன்வர வேண்டும்.

மற்றோர் யோசனை கூறுவேன்— நகராட்சி மன்றத்தார், அறிஞர்களை, பலதுறைகளிலே விற்பன்னர்களாக உள்ளவர்களை, மருத்துவத்துறையினர், என்ஜினியரிங் துறையினர், விவசாயத்துறையினர், ஆகியோரை வரவழைத்து, சிறந்த சொற்பொழிவுகள் நடத்த ஏற்பாடு செய்தல் வேண்டும். பொதுமக்களின் அறிவு வளம்பெறும், நகர்களை எங்ஙனம் நல்லமுறையில் வைத்திருப்பது என்ற பொறுப்புணர்ச்சியும் ஏற்படும், நகராட்சியின் மூலம், மக்களின், வாழ்விலேயும், புதியமணம் வீசும். ஈரோடு நகராட்சிமன்றத்தினரின், பெருங்குணத்தைப் பாராட்டுகிறேன். அவர்கள், எனக்கு அளித்தவரவேற்புக்கு என் மனமுவந்த நன்றி,” என்று திரு. வி. கலியாண சுந்தரனார் பேசினார்.

தோழர் அண்ணாத்துரையைப் பாராட்டி, நகராட்சிமன்றத்தலைவர், ஓர் வரவேற்புரை படித்தளித்தார். அதற்கு நன்றிகூறுகையில் தோழர் அண்ணாத்துரை, “ஈரோடுநகராட்சி மன்றத்தினரின் பெருங்குணத்தைக் கண்டு நான் மிகவும் மகிழ்கிறேன்— ஆச்சரியமுமடைகிறேன். வழக்கமாக இப்படிப்பட்ட நகராட்சிமன்றங்கள், நாடாளும்கட்சியிலே உள்ள தலைவர்களுக்கே, வரவேற்பளிப்பது வாடிக்கை. அதுவே முறையாகவும், சம்பிரதாயமான காரியமாகவும் இருந்து வருகிறது. இன்று, எனக்

(7-ம் பக்கம் பார்க்க)

புதிய வெளியீடுகள்!

விற்பனைக்குத் தயார்
அண்ணாதுரை எழுதிய வடநாட்டுச்
சுரண்டலை விளக்கிக் காட்டும்

“பணத்தோட்டம்”
விலை ரூ. 1—0—0

தோழர் இரா. நெடுஞ்செழியன் M.A., அவர்கள் எழுதிய மொழிப் பிரச்சினையை விளக்கிக் காட்டும்

“மொழிப் போராட்டம்”
விலை ரூ. 1—0—0

திராவிடப் பண்ணை
தெப்பகுளம்—திருச்சி.

வெளிவந்துவிட்டது

1. “மக்கள் கவிஞர்”
(People's Poet) C. N. A. யின் ஆங்கில A. I. R. சொற்பொழிவு
„ „ 0—4—0

2. “திராவிடர் போர் முரசு”
(பெரியார் அறிவுரை) 0—8—0

கிடைக்குமிடம்:—

நியூ ஜஸ்டிஸ் ஆபீஸ்
7, நமசிவாய முதலி தெரு
வண்ணாரப்பேட்டை, சென்னை—21.

# கடமை அறியாக் கரந்துகள்

**போதுமக்கள் வெறுக்கிறார்கள்!**
**ஊழல்கள் மலிந்துவிட்டன!**
**பதவிப்பித்தம் பிடித்தாட்டுகிறது!**
**சுயநலம் தாண்டவமாடுகிறது!**

இந்தப் பலமான குற்றச்சாட்டுகளைக் காங்கிரசின் மீது, நாம் கூறினால், காங்கிரஸ் நண்பர்களுக்குக் கடும் கோபம் வருகிறது—கல்லைத் தேடுவதா அல்லது ஏதேனும் பழிச்சொல்லைத் தேடுவதா என்று கிளம்புகிறார்கள்.

காங்கிரசாட்சி மீதுதான், நாம் மேலே பொறித்துள்ள குற்றச்சாட்டுகளை வீசுகிறார்-நமது கட்சித் தோழரல்ல-பொது உடைமைக்காரரல்ல, ஜெயப்பிரகாஸ் கூட்டத்தாருமல்ல-அசல் காங்கிரஸ் தலைவரொருவர்—முன்னாள் மந்திரியாகவுமிருந்தவர்.

பட்டாபி வெற்றி பெற்றதைப் பாராட்டிப் பேசும்போது, காங்கிரசாட்சியின் போக்கையும் கண்டித்துப் பேசினார், காங்கிரஸ் பிரமுகரும், முன்னாள் மந்திரியுமான கரந்த்.

"மத்யசர்க்கார், மாகாண சர்க்கார்கள், ஆகிய எங்கும், காங்கிரஸ் ஆட்சி, மேலும், மேலும் பொதுஜன வெறுப்பைப் பெற்ற வண்ணம் உள்ளன. நமதுவார்த்தைகளிலே,மக்கள், மெள்ள மெள்ள, ஆனால் நிச்சயமாக, நம்பிக்கையை இழந்து வருகின்றனர். ஏனெனில், நாம் வாக்களித்தது அதிகம் — நடவடிக்கையில் உள்ள பலனோ மிகமிகக்குறைவு. அதிகார மோகம் கொண்டும், இலாப வேட்டைக்காகவும், காங்கிரசிலே பலர் வந்து குவிகிறார்கள். எங்குபார்த்தாலும், சுயநலத்துக்காக, சர்க்கார் நடவடிக்கையைப் பயன் படுத்திக்கொள்ளும் காரியமே நடைபெறுகிறது."

* * *

தர்ம ஆஸ்பத்திரியிலே. நோயாளியின் உடல்நிலையைப்பற்றி, அங்கு இருக்கும் நர்சுகளோ, அல்லதுபணியாட்களோ பேசிக்கொள்வதுண்டல்லவா, இனிப் பிழைப்பது ஏது! ஈளை கட்டிவிட்டது! நீர்போகவில்லை! பார்வை மங்கிவிட்டது—என்று. அதுபோல, கரந்த், பேசுகிறார், மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது — காங்கிரசாட்சியை மக்கள் வெறுக்கிறார்கள், என்று.

தர்ம ஆஸ்பத்திரி, ஊழியர் போன்ற, நிலையில் உள்ளவரல்ல, கரந்த்.பொறுப்பானபதவிபார்த்தவர் —அதைவிட அதிகமானபொறுப்பு இப்போதும் உண்டு அவருக்கு-பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி என்பதால். காங்கிரசாட்சி, மோசமாகப்போகிறது என்பதை, ஏதோ பத்தினித்தனத்துடன் கூறிக்கொள்வது மட்டுந்தானா, இவர் கடமை?

இவரே இதைச் சொல்வதால், இந்தக் குற்றச்சாட்டை, எதிர்க்கட்சிக்காரனின் வீண்கண்டனம் என்று கூறிவிட முடியாது. கரந்த் இன்றும் காங்கிரசிலே ஒரு முக்கியஸ்தர்.

அவர் கூறுகிறார், பகிரங்கமாக, இன்றைய காங்கிரஸ் ஆட்சி மத்தியில்இருப்பதும்சரி, மாகாணங்களில் இருப்பதும் சரி, மகா மோசமாகிவிட்டது என்று. இப்படிப்பட்ட குற்றச்சாட்டை, எப்படிப் பொறுத்துக் கொள்கிறார்கள், நம்மீது சீறும் காங்கிரஸ் நண்பர்கள்.?

ஊழல் மலிந்திருப்பதாக, சுயநலம் தாண்டவமாடுவதாகக் கரந்த் கூறுகிறார் என்றால், இன்றைய காங்கிரசாட்சியினால் எதிர்பார்த்த நலன் கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல, கேடு நேரிட்டிருக்கிறது என்றுதானே பொருள்.

கரந்த் கூறுவது தவறு, வீண்பழி சுமத்துகிறார், பதவி பறிபோனதால் அதுபோலப் பேசுகிறார் என்றால், உடனே ஏன், காங்கிரஸ் கமிட்டி அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது? ஏன் அச்சம்.?

கரந்த் மீது மட்டுமா, இதுபோலப் பச்சையாகக் காங்கிரசின் ஆட்சி முறையைக் கண்டித்த யார் மீதுதான், ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முடிந்தது? பலதலைவர்கள், காங்கிரசாட்சி மீது சாட்டியிருக்கும் குற்றச் சாட்டுகளைப் பார்த்தால், மானநஷ்ட வழக்குத் தொடரக் கூடியதாகக் கூடத் தோன்றுகிறது.

சுயநலத்துக்காகச்: சர்க்காரிடம் சலுகைகள் பெறுவதையே வேலையாக்கிக்கொண்டார்கள் காங்கிரசார் என்று கரந்த் போன்றவர்கள் கூறும் போது, காங்கிரசாட்சியை நடத்தும் மந்திரிமார்களுக்கு, வெட்கம் பிறக்க வேண்டாமா? கரந்த் மீது மானநஷ்ட வழக்குத்தொடுக்கவேண்டும் என்று துடிக்காத காரணம் என்ன? வேறு கட்சிக்காரர் யாராவது இதுபோலக் கூறிவிட்டால், எவ்வளவு பதறுவர், சீறுவர், பாய்வர்! ஏன் இப்போது மௌனம்? கரந்திடம் கோபம் காட்டினால், அவர் ஊழல்களை விவரமாக அம்பலப்படுத்திவிடுவார் என்ற அச்சமா?

கிருபளானி, தாண்டன், கொண்டா வெங்கடப்பய்யா, கரந்த், இப்படி, அடிக்கடி காங்கிரஸ் தலைவர்கள் ஒவ்வொருவராக, காங்கிரசாட்சியின் ஊழலைக் கண்டித்துப் பேசியபடிதான் உள்ளனர், ஒருவர் மீதாவது, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கத் தைரியம் இல்லை ஆட்சியாளர்களுக்கு.

"இவ்விதமாகப் பழி சுமத்திப் பேசிக்கொண்டிருக்க வேண்டாம், என்ன ஊழல், என்ன சுயநலம், என்பதை விளக்கமாக விவரமாகக் கூறு, கேட்போம்" என்று கூடக் காங்கிர

சாட்சியினர் கேட்கவில்லை. ஏன், என்று நமது காங்கிரஸ் நண்பர்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

காங்கிரசாட்சியின் ஊழலைக் காங்கிரசைச் சார்ந்த முக்யஸ்தர்களே கண்டித்துப் பச்சையாகப் பேசும் அளவுக்கு நிலைமை மோசமாகி விட்டிருக்கிறது.

நாம், கேட்க விரும்புகிறோம், இப்படி, அடிக்கடி, காங்கிரசாட்சியின் ஊழல்களைக் கண்டித்துப் பேசும் காந்துகளே, என்ன பலன், இதனால் என்று. இவர்கள் கண்டனங்களைக் கேட்டு, ஏதாவது, ஆட்சி புரிவோர் தங்களைத் திருத்திக்கொள்கிறார்களா! ஒரு விஷயத்தைக் கண்டிப்பது, நிலைமையைக் கண்டிப்பது, என்றால், அந்தக் கண்டனத்தின் மூலம், நிலைமை சரிப்படுத்தப்படவேண்டும், அப்போதுதான், கண்டனத்துக்குப் பலன் உண்டு! வெறும் வாய்வீச்சினால் காந்துகள் காணப்போகும் பலன் என்ன?

காங்கிரசாட்சியினால் விளையும் கேடுகளைக் கண்டு உண்மையிலேயே அவர்களின் மனம் பதறுமானால், அந்த ஊழல்களைப் போக்கவேண்டும் என்று அவர்கள் உள்ளம் துடிக்குமானால், ஆட்சியிலிருப்பவர்களுக்கு இறுதி எச்சரிக்கை விட்டு விட்டு, பொதுமக்களிடம் சென்று, உண்மையை உரைத்து, இன்று ஊராள வந்திருக்கும் காங்கிரஸ் தலைவர்கள், மக்களைக் காட்டிக் கொடுத்துவிட்டார்கள், எனவே அவர்கள் நீக்கப்படவேண்டும், என்று கூற வேண்டாமா? பொதுமக்களின் கருத்தைத் திரட்டவேண்டாமா? அதுதானே, பொறுப்புள்ளவர்களின் போக்காக இருக்க முடியும்.

அழுகல் பழங்களை விற்பனை செய்யக் கூடாது—என்று அழுகல் பழங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ள, கடையைமூட முயற்சிக்காமலேயே, ஊரெல்லாம் தண்டோரா போடுவதா!

ஜனநாயக கோட்பாட்டின்படி, ஆளும் வாய்ப்பைப் பெற்ற ஒரு கட்சி, பீடம் ஏறிய பிறகு, ஒழுங்காக ஆளத்தவறினால், ஊழல்மிகுந்த ஆட்சியை நிறுவினால், அந்தக் கட்சியிலே, ஆட்சிப்பொறுப்பில் இல்லாமல், ஆலோசனை கூறும் நிலையில் உள்ள காந்துகள், கட்சிக் கூட்டங்களிலே, முதலில், தமது கண்டனத்தைத் தெரிவிக்கவேண்டும்—அங்கு ஆதரவு திரட்டி, ஆளவந்தார்களைத் திருத்தவோ, நீக்கவோ முற்படவேண்டும். அம்முறையால் பலன் ஏற்படவில்லையானால்; அந்தக் கட்சியை விட்டே விலகி, நாட்டு மக்களிடம் உண்மையை எடுத்துக் கூறி, மக்களை அந்தக் கட்சியின் பிடியிலிருந்து விடுவிக்கவேண்டும். அதுதான் பொறுப்புள்ளவர்களின் போக்கு.

இதையும் செய்வதில்லை, காந்துகள்—காந்துகள் இவ்வாறு கண்டிக்கும்போது, ஆளவந்துள்ளவர்களும், இது அக்ரமம் என்று பதிலளித்து விட்டு, ரோஷத்தோடு காந்துகளின் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று எடுத்துக் காட்டுவதில்லை!

ஆளவந்துள்ளவர்களுக்குரோஷம் காணோம், அவர்களைக் கண்டித்துப் பேசும் காந்துகளுக்குப் பொறுப்புணர்ச்சியைக் காணோம்.

இருசாராரும், ஒரே காட்சியிலேயே இன்றும் இருக்கிறார்கள்! எப்படி இருக்கிறது, குடும்ப வாழ்க்கையின் இலட்சணம்!!

ஒரு கட்சியின் ஆட்சிப் போக்கு, சரியாக இல்லை, மக்களுக்கு நன்மை தருவதாக இல்லை, கேடு உண்டாக்குகிறது, என்று, அந்தக் கட்சியிலே உள்ள பிரமுகருக்குத் தோன்றினால், அவர், அந்தக் கட்சியிலே இருக்கலாமா? மற்ற இடங்களிலே; அவ்விதம் இருக்கமாட்டார்கள். ஒரு கட்சியின் ஆட்சிமுறை கேடானதாக இருக்கிறதென்று தெரிந்தும், அதிலேயே இருப்பதை, அரசியல் அறிவீனம் என்றுகூட அல்ல, அரசியல் அநீதி என்றும் எண்ணுவார்கள்—அரசியல் ஒழுக்கமல்ல என்று கருதுவார்கள்.

இங்குதான், ஆட்சியாளர்களும் காங்கிரஸ் கட்சி, அவர்கள் பொது மக்களிடம் பேசும்போது, தமது ஆட்சிமுறையின் அற்புதமான பலன்களைப்பற்றி அளப்பர்; அதே ஆட்சிமுறையை அவலட்சணமானது என்று, கூறுவர் காந்துகள், அவர்களும் காங்கிரஸ் கட்சியினர் என்றே தம்மைக் கூறிக்கொள்வர்!

பொதுமக்கள், ஒருநாள் காங்கிரஸ் கூட்டத்திலே, காங்கிரசாட்சியினால் உண்டான நன்மைகளைப் பற்றிய பிரசங்கம் கேட்பர் (மந்திரிமார்கள் வருகிறபோது) மற்றோர் நாள், காங்கிரசாட்சியிலே ஊழலும் சுயநலமும் தாண்டவமாடுவது பற்றிய பிரசங்கத்தைக் கேட்பர் (காந்துகள் பேசும்போது) இரண்டும் காங்கிரஸ் கூட்டந்தான்! இரு கூட்டங்களுக்கும், 'வந்தே மாதரம்' இருக்கும், 'ஜனகணமண' இருக்கும்! பரிதாபத்துக்குரிய பொதுமக்கள் என்ன முடிவு காண்பது, இந்த நிலைமையைக் கண்டு!

ஏன், பொறுப்புணர்ச்சி காந்துகளுக்கு இல்லை; ரோஷ உணர்ச்சி பதவி பெற்றுள்ளவர்களுக்கு இல்லை; இருவிதமான பேச்சு ஒரே கட்சியினரால் ஒரே கட்சியைப்பற்றிப் பேசப்படும்போது, ஏன், பொது மக்களுக்கு, மன எரிச்சல் உண்டாகவில்லை!

மற்ற நாடுகளிலே, காந்துகள் பேசும்போது, பொதுமக்கள் "ஆட்சியிலே ஊழல் இருக்கிறது என்கிறீரே, ஏன் அதைப் போக்கவில்லை? முயற்சிக்கவில்லையா? முடியவில்லை? ஊழலைப் போக்க முடியாவிட்டால், ஏன் இன்னமும் தாங்கள் அந்தக் கட்சியிலே இருக்கிறீர்? விலகாத காரணம் என்ன?" என்று கேட்பர். அதுபோலவே ஆட்சியை நடத்துபவர்கள் பேசும்போது "ஆட்சிமுறையிலே அநேக ஊழல்கள் இருப்பதாக ஆளும் கட்சியைச் சார்ந்த காந்துகள் கண்டித்துப் பேசுகிறார்களே—கேவலமான குற்றச்சாட்டுகளைச் சுமத்துகிறார்களே, ஏன் அவைகளை மறுக்கவில்லை—முடியவில்லையா—ஏன் காந்துகளைக் கண்டிக்கவில்லை,-கண்டித்தால் அவர்கள் மேலும் பல உண்மைகளை அம்பலப்படுத்தி விடுவார்கள் என்ற பயமா? ஏன் அவர்களைக் கட்சியை விட்டு வெளியே துரத்தக்கூடாது, துரத்தினால் அவர்கள், புதிய கட்சி துவக்கிப் பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுவிடுவார்கள் என்ற பயமா?" என்றும் பொதுமக்கள் கேட்பர்.

இங்கோ, பொதுமக்களுக்கு அந்த அளவுக்கு அரசியல் பொறுப்புணர்ச்சி இன்னும் வளரவில்லை. காங்கிரசாட்சி வந்துவிட்டால் கவலையற்று வாழலாம், ஏனெனில் காங்கிரசாருக்கு, மக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகள் என்ன, நாட்டு நலிவைப் போக்கும் திட்டம் என்ன என்பது தெரியும்; எனவே அவர்கள் ஆட்சியிலே, அவைகளுக்கான வழிவகைகள் கண்டுபிடிக்கப்

(13-ம் பக்கம் பார்க்க)

# ★ அறப்போர்க் குறிப்புகள் ★

அக்டோபர் கடைசி நாள், அறப்போரை மேற்கொண்டுள்ள, திராவிடர் கழகத்தார், சென்னை ஜிம்கானா மைதானத்திலே, நடத்திய பொதுக் கூட்டம், முக்கியமான சம்பவம். இடையே நிறுத்தப்பட்ட அறப்போர், மீண்டும் துவக்கப்படுகிறது—இந்த வரலாற்றின், முன்னுரை போன்றது இக்கூட்டம். திரு. வி. கலியாணசுந்தரனாரின் சீரிய தலைமையிலே, கூட்டம் நடைபெற்றது—அதாவது அறப்போரின் துவக்கத்துக்கு, திரு. வி. க. தமது பேராதரவைத் தந்தார், என்று பொருள்.

உழைத்து, உள்ளம் நொந்து, உரு மாறிப் போயுள்ள அந்த உத்தமர், அன்று, 'உபதேசம்' செய்தார், ஏராள வந்துள்ள ஊதாரிகளுக்கு. நல்லவர்களின் குணம், யாரையும் நல்லுரையால் நல்வழிப்படுத்திவிடலாம், என்பதுதானே. அம்முறையிலே, அறப்போர் முரசறையக் கூட்டப்பட்ட இடத்திலே, பேரறிவாளர், ஆட்சியாளருக்கு அறிவுரை புகன்றார், "ஆட்சியாளரே! ஆணவத்தால் அழியாதீர்! நாட்டுமக்களின் மனதை நன்கு அறிந்து நான் கூறுகிறேன். இந்தி விஷயத்திலே, வீம்பு வேண்டாம், வீண் பிடிவாதம் வேண்டாம், கட்டாயத் திட்டத்தை விட்டு விடுங்கள்—கபடம் வேண்டாம்—கர்வம் கொள்ள வேண்டாம்—பெரியாரைப் பகைத்துக் கொள்ளவேண்—இன்றிரவே யோசித்து ஒரு நன்முடிவுக்கு வாருங்கள்,—அறப்போர் துவக்குவதற்குள், நாளயதினமே, ஒரு உத்தரவை வெளியிடுங்கள், கட்டாய இந்தித் திட்டத்தை ரத்து செய்துவிட்டோம் என்று; அறவழியை நாடுங்கள் — அன்பு மார்க்கத்தைத் தேடுங்கள்" என்று கூறினார். உருக்கமான உரை! உள்ளத்திலே ஏற்கனவே ஏராள வந்தோருக்கு ஏறிப்போயுள்ள ஆணவம், இந்த அறவுரையைக் கேட்டு நடக்கும் பண்பினை — ஆளவந்தார்களுக்குத் தராது. எனினும் அவர் கூறினதிலே ஒருவகைப் பொருள் இருக்கிறது.

அறப்போர் தொடுக்கு முன்னம், அதனை அறிவிப்பது மட்டுமல்ல, என்ன செய்தால், அறப்போரைத் தவிர்க்கலாம், என்ற சீரிய யோசனையையும் கூறுவது, களத்திலே கூடினோருக்குற்ற கடமை, என்ற முறையைக் கலியாணசுந்தரனார் கையாண்டார் என்றேகருதுகிறோம். அவருடைய நல்லுரைக்குப் பிறகு, ஆட்சியாளர்களின் மனம் மாறவில்லையானால், ஒரே ஒரு பொருள் தான் கொள்ள முடியும் — ஆட்சியாளர்கள் வலுவில் நம்மை அறைகூவி அழைக்கிறார்கள் போருக்கு என்பது தான் பொருள். அந்த அறைகூவலை ஏற்றுக்கொள்ள நாம் தயார் என்பதை, நவம்பர் 1-ந்தேதிய கூட்டம்-ஜிம்கானா மைதானத்தில் நடைபெற்ற கூட்டம் — நன்கு விளக்கிக் காட்டிவிட்டது. அறப்போர்க்காதையிலே, இரண்டாம் கட்டத்தில், முதல் பகுதியின், (முதல் பக்கம்) என்று கூறலாம், அன்றைய கூட்டத்தை.

அறப்போர் மீண்டும் தொடங்கப்படுவது உறுதி என்பதை மட்டுமல்ல, அதற்கு ஆதரவு மிகமிக அதிகமான அளவு என்பது, அன்று ஜிம்கானா மைதானக் கூட்டத்தினால், எதையும் கவனிக்க மறுக்கும் ஆட்சியாளர்களுக்கும் விளங்கி இருக்கும்.

மூன்று கலர், நாலு கலர், நாலு ராயல், ஆறு ராயல், வித்தோ போஸ்டர் என்ற இவ்வகையான விளம்பரங்கள், ஒட்டப்பட்டிருந்த சென்னைச் சுவர்களில், 'இப்படி இருந்த அச்சுத் தொழில் இப்போது இவ்வளவு அழகாக வளர்ந்திருக்கிறது' என்பதை எடுத்துக் காட்டும் விநோதமான, போஸ்டர், ஜிம்கான மைதானத்தில் திராவிடர் கழகக் கூட்டம் என்று காவி ஏறிய வெள்ளைத்தாளில் வெண்மை கலந்த கருப்பு எழுத்துக்கள் கொண்ட போஸ்டர்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காணப்பட்டன. விடுதலையில் தொடர்ந்து மூன்றுநாட்கள், அதே 'சேதி' விளம்பரமாக வெளிவந்திருந்தது. இவ்வளவுதான், விளம்பர ஏற்பாடு—இதற்கு, அன்று, ஜிம்கானா மைதானத்திலே வந்திருந்த கூட்டம் எவ்வளவு! எதிர்க்கட்சிக்காரரும், உண்மையிலேயே, மலைத்துத்தான் போயிருக்கவேண்டும்.

*  *  *

மறுநாள் காலை, நாங்கள் அப்பக்கம் மோட்டாரில் போக நேரிட்டது. "அதோ பாருங்கள், அதோ...." என்று தம்பி சம்பத் ஜிம்கானா மைதானத்தைச் சுட்டிக்காட்டினான்-ஒரே காக்கைக் கூட்டம்! அந்தக் காக்கைகள் ஜரூராக வேலை செய்துகொண்டிருந்தன. தம்பி சம்பத், "நேற்று நமது கூட்டத்துக்கு வந்திருந்தவர்கள், தின்னும்போது கீழே சிதறிய வேர்க்கடலைகளைப் பொறுக்க இவ்வளவு காக்கைகள் கூடி உள்ளன" என்றான். வேடிக்கைக்காக அல்ல-முன்னாள் மாலை நடைபெற்றகூட்டம் அவ்வளவு பெரியது என்பதை விளக்கக் கூறினான். உண்மையிலேயே, சமீப காலத்தில், அவ்வளவு பெரிய கூட்டம் நடந்ததில்லை, என்பதுதான், பொதுவாகவே எல்லோருடைய அபிப்பிராயமும். ஈரோடு மாநாடு நடைபெற்றதும் சென்னையில் நடைபெறும் முதல் கூட்டம்-அடுத்த இரண்டு நாட்களுக்குள் அறப்போர் தொடங்கப்படும் என்பதை அறிவிப்பார்கள் என்ற ஆவலுடன் மிகப் பெருந்திரள் கூடி இருந்தது. இவ்வளவு பெரிய கூட்டத்துக்காக, எடுத்துக் கொள்ளப்பட்ட விளம்பர முயற்சிதான், நான் முதலில் குறிப்பிட்ட கர்நாடகப் போஸ்டர்கள்.

*  *  *

இளைஞர்கள் மனதிலே எண்ணம் வரத்தானே செய்யும் — இதே கூட்டத்துக்கு, இன்னும் கொஞ்சம் தாராளமானமுறையிலே விளம்பரம் செய்து, அலங்காரங்கள் அமைத்து இருந்தால், கூட்டம் எவ்வளவு விமரிசையாக இருந்திருக்கும் என்றெல்லாம். ஏனோ, நாம் இன்னும், அந்தத் துறையைக் கவனிக்காமலேயே விட்டு விடுகிறோம்.

*  *  *

அவ்வளவுபெரியகூட்டம் இருக்குமென்று எதிர்ப்பார்க்காமலேயே, நாங்கள் 'மோட்டார் வானில்' போய்க்கொண்டிருந்தோம், மவுண்ட் ரோடில்-இருபுறப்பாதை அமைப்புகளின் வழியாகவும், சாரை சாரையாக இளைஞர்கள், இடையிடையே

தாய்மார்கள், ஜிம்கானா மைதானத்தை நோக்கிச் சென்ற வண்ணம் இருந்தனர்-மைதானத்தருகே சென்றோம், மாபெருங் கூட்டம இருக்கக் கண்டோம்—மேடை இருக்குமிடம் தெரியவில்லை-கூட்டம் மிகப்பெரிது என்பது மட்டுமல்ல அதற்குக் காரணம், அவ்வளவு பெரிய கூட்டத்துக்கு அமைக்க வேண்டிய விதமாக உயர்ந்ததாக, மேடை அமைக்கவில்லை. விளக்குகள், அமைச்சர்களின் அறிவுபோல மங்கலாகவே காணப்பட்டன—சில விளக்குகள், குபீல் குபீல் என்று எரிவதும், பிறகு அணைவதுமாக, ஏறத்தாழ டாக்டர் சுப்பராயன் போன்றவர்களின் மந்திரி வாழ்வுபோலவே இருந்தன. மக்களோ பெருந்திரள். இந்நிலையில், ஒலிபெருக்கியோ, திடீரென ஓய்வு எடுத்துக்கொண்டது. மேடைக்கு வெகுதொலைவில் இருந்தவர்கள், பேச்சுக்கேட்காததால்,வாடினர்-பதைத்தனர் - ஆனால் அவர்களின் பொறுப்புணர்ச்சியைப் பாராட்டுகிறேன் - சத்தம் கிளம்பவில்லை-சந்தடி இல்லை-பெரும்பாலும் அப்படிப்பட்ட சமயத்திலே குழப்பமே ஏற்பட்டுவிடுவதுண்டு - அன்று நமது தோழர்கள் நடந்துகொண்ட முறை மிக மிகப்பாராட்டப்பட வேண்டியது. ஏதோ ஒருவிதமாகக் கூட்டம்முடிந்தது- அதிகநேரம் பேச வசதியில்லை. மக்கள், திரும்பிச்செல்லும் காட்சியையும் கண்டோம். ஏற்பாடுகள் சரியாக இல்லை, என்ற ஏக்கத்துடனேயே அவர்கள்சென்றிருப்பர். ஆனால் கூட்டம் நடைபெற்ற கொஞ்சநேரத்தில் மக்கள், தெளிவாக ஒருவிஷயத்தைத் தெரிந்து கொண்டனர், அறப்போருக்கான சகல ஆயத்தங்களும் செய்யப்பட்டாய்விட்டன என்பதை.

* * *

தொண்டை மண்டலம் பள்ளிக்கூடத்திலே ஒரு புதுமுறையை ஏற்படுத்திவிட்டார்கள் - மாணவர்கள் இருமுறை வருவது, பாடம் பெறுவது என்ற ஷிபடு (Shift System) முறை. இதனால் இந்திஎதிர்ப்பு மறியலை வழக்கப்படி அங்குசெய்வதற்கு முடியாதநிலை ஏற்பட்டது. "மிகமிக நல்லதாகிவிட்டது" என்று மகிழ்ச்சியுடன் கூறித் தங்கள் பேட்டையில் உள்ள பள்ளிக்கூடத்திலே, மறியலை நடத்தும்படி. முத்தியாலுப்பேட்டை திராவிடகழகத்தோழர்கள் கூறினர்.

அறப்போரின் களம், மாற்றப்பட்டிருக்கிறது. களத்தையும், அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட நாங்கள் நவம்பர் முதல்தேதி சென்றோம். முத்தியாலுப்பேட்டை திராவிடர் கழகத்தலைவர் பாவலர் அப்துல்காதர் அவர்களும், செயலாளர் (மாணிக்க வாசகம்) மணிமொழியாரும், அவர் குமாரர் இளம்செழியனும், தோழர் ஜக்கரியாவும் மிக்கஉற்சாகத்துடன் தலைவருடன் கலந்து பேசினர். நாங்கள் அந்தப்பகுதிக்குச் செல்வது கண்டு, பொதுமக்கள், நாளைமறியல்! — என்பதுபற்றிப்பேச ஆரம்பித்தனர். ஆங்காங்கு ஆர்வமுள்ளதோழர்கள் சிறு சிறு கூட்டமாகக் கூடலாயினர். இந்தி எதிர்ப்பு மறியல்செய்யும் தொண்டர்கள், முத்தியாலுப்பேட்டை திராவிடர் கழகநிலையத்திலிருந்து புறப்பட்டு, லிங்கிச்செட்டித் தெருவிலுள்ள, முத்தியாலுப்பேட்டைப்பள்ளிக்கூடத்திற்குச்செல்வது என்று முடிவு செய்யப்பட்டது. இந்தப்பள்ளியில், இரு நுழைவிடங்கள் உள்ளன — ஒன்று விசேஷமாக, உபயோகிக்கப் படுவதில்லை என்று கூறினார்கள். வழக்கமாக மாணவர்கள் நுழையும், வழியிலேதான், தொண்டர்கள் நின்று மறியல் செய்வார்கள். ஒரு சமயம், பள்ளிக்கூட நிர்வாகிகள், இருவழிகளையும் உபயோகிக்க முன்வந்து விட்டால், நமது தொண்டர்கள் இருவழிகளிலும் மறியலைச் செய்யவேண்டி நேரிடும்.

முத்தியாலுப்பேட்டைப் பகுதியிலே நமக்குப் போராதரவு இருப்பது மட்டுமல்ல, முத்தியாலுப்பேட்டைப் பள்ளி மாணவர்களின் போராதரவும் நமக்கு இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. ஆர்வமும் ஆதரவும் எங்கு அதிகமாக இருக்கிறதோ, அங்குதான், பெரியார் வலியுறுத்திக் கூறிய விஷயத்தை நமது தோழர்கள் மிக ஜாக்ரதையாகக் கவனிக்கவேண்டும், அதாவது ஒரு துளியும் கலவர உணர்ச்சியோ பலாத்கார உணர்ச்சியோ தலைகாட்ட விடக்கூடாது. நமது போராட்டம், நியாயமானது என்பதிலேயும், இறுதி வெற்றி நமக்குத்தான் என்பதிலே தளராத நம்பிக்கையும் நமக்கு உண்மையிலேயே இருக்குமானால், அமைதியை நாம் நிலைநாட்டிக் காட்டவேண்டும். ஆர்வம் இருக்கவேண்டும், ஆனால் அதன் எல்லை, அமைதி என்பதை மறக்கக்கூடாது. நாம் நடத்தும் மறியல், ஒழுங்காக, சாந்தமாக, கண்ணியமான முறையிலே இருப்பதை எதிரிகளும் ஒப்புக்கொள்ள வேண்டிய விதமாக நாம் நடந்துகொள்ள வேண்டும். நாம், மேற்கொண்டுள்ள கொள்கையும் திட்டமும், நமக்குப் பலவிதமான இன்னல்களையும் இழிவுகளையும், கொடுமைகளையும் நம்மீது மற்றவர்களால் வீசுவதற்கு இடம் தருவதாக இருக்கிறது— எனவே நமக்குச் சகிப்புத்தன்மை மிகமிக அதிகமான அளவிலே இருக்கவேண்டும். வெற்றி இதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. வேறு கட்சிக்காரர்கள், நமது கட்சியினர்போல, உடை அணிந்து உடனிருந்து ஊறு செய்யக்கூடும் என்பதைத் தலைவர் அன்றைய கூட்டத்திலே எடுத்துச் சொன்னார். கழக நிர்வாகஸ்தர்களும், அறப்போர்க் காரியத்தைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பிலிருப்பவர்களும், இதை மனதிலே பதியவைத்துக்கொண்டு, கழகக் காரியத்தையும் அறப்போருக்கான அலுவலையும், நன்றாகத் தெரிந்த, தேறின, கழகத் தோழர்களிடம் மட்டும் ஒப்படைக்க வேண்டும். கண்டவர்களிடம் காரியங்களைத் தந்து தொல்லைக்கு ஆளாகாமலிருக்க வேண்டும்.

* * *

சென்னை நகரெங்கும், இன்னும் ஒரு நாள்தான்-நாளையதினம் இந்தி எதிர்ப்பு மறியல் தொடங்கப்பட இருக்கிறது என்பதுபற்றிய பேச்சாகவே இருக்கிறது. சர்க்காரின் போக்கு எப்படி இருக்கும் என்பதுபற்றிப் பலவிதமான யூகங்கள் கிளம்பியுள்ளன. இம்முறையும், மறியல் செய்யும் தொண்டர்களைக் கைது செய்யமாட்டார்கள் — ஏனெனில், மறியல் செய்வது சட்டவிரோதமானதல்ல, முதலமைச்சரே அறிக்கையும் விட்டிருக்கிறார், இது பற்றி. ஆனால், மறியல் செய்கிறார்கள் என்ற காரணம் காட்டிப் பிடிக்காமல், வேறு சாக்குகளைக் கூறி, ஊர்வலம் சென்றார்கள், ஒழுங்குகெட நடந்துகொண்டார்கள் என்று எதையோ கூறி, சிறையில் போடத்தான் செய்வார்கள், என்று சிலர் கூறுகின்றனர். வேறு சிலர், கழகத்தின் முக்யஸ்தர்களை 'கூண்டோடு' பிடித்துத் தள்ளிவிடப் போகிறார்கள், என்றும் கூறுகிறார்கள். மற்றும் சிலர், இம்முறை, தடியடி தர்பார் மூலம், கழகத்தைத் தீர்த்துக் கட்டிவிடுவதென்று மந்திரிக் கட்சியினர் திட்டமிட்டிருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது. அறப்போர் வீரர்கள், ஆளவந்தார்களின் எத்தகைய முறைக்கும் ஆட்படத் தயாராகவே உள்ளனர். ஜிம்கானா மைதானக் கூட்டம் முடிந்ததும், பலர், மறியலில் கலந்து கொள்வதற்காகப் பெயர் கொடுக்க முன்வந்து விட்டனர் — தாய்மார்கள் பலர், ஆர்வத்துடன், முன்வரிசைக்கு வந்துள்ளனர். சர்க்காருக்கு, இவ்வளவு சேதிகளும், தெரியாமலிருக்க முடியாது. தங்களை நோக்கிக் கிளம்பும் கண்டன அலைகளை அவர்கள் கண்டு ஓரளவு கலங்கி இருந்த போதிலும், 'ஒரு கை' பார்த்துவிடத்தான் வேண்டும் என்று உறுமும் சர்தார்

(9-ம் பக்கம் பார்க்க)

## நகராட்சி மன்றத்தாரின்

2-ம் பக்கத் தொடர்ச்சி

கும், திரு. வி. கலியாணசுந்தரனாருக்கும் பதிலாக, இரண்டு மந்திரிகள் வந்திருந்தால், நகராட்சிமன்றத்தினர், தமது வரவேற்புரையிலே, நகருக்குத்தேவையான சிலதிட்டங்களைப்பற்றிக் குறிப்பிட்டு, அதற்கான பண உதவியைச் சர்க்கார் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கலாம். நாங்களோ நாடாளும் கட்சியினரின் சந்தேகத்துக்குஆளானவர்கள். வந்திருப்பதோ திராவிடர்கழக மாகாண மாநாட்டுக்கு; இந்நிலையில் எங்களுக்கு, வரவேற்பு அளிக்க முன்வந்தீர்கள். உங்கள் பெருங் குணத்தை நாங்கள் பெரிதும் பாராட்டுகிறோம்.

இந்த நற்பண்புக்கு, எங்கள்நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

திரு. வி. க. அவர்கள், பத்தாண்டுகளுக்கு முன்பு, ஒரு முறை, ஈரோடு வந்து போனதைக் குறிப்பிட்டார். நானேஈரோடுக்கு இதற்கு முன்பு வந்து போனவன் என்கிற முறையிலே உள்ளவன் அல்ல, இங்கேயே பல ஆண்டுகள் வசித்து வந்தவன் — இப்போதும் அடிக்கடி இங்கு வந்தபடி இருப்பவன்—ஊரும் ஊர்ப் பிரமுகர்களும், எனக்கு மிகுந்த பழக்கம்—எனவே, எனக்கு, வரவேற்பு அளிக்க எண்ணினீர்கள் என்று கேள்விப்பட்டபோது, எனக்குச் சற்றுக் கூச்சமாகவே இருந்தது. பிறகு உங்கள் பெருங்குணத்தை உணர்ந்து மகிழ்ந்தேன்.

திரு. வி. கலியாண சுந்தரனார் கூறிய சில சீரிய யோசனைகளை, நகராட்சி மன்றத்தினரின் கவனத்துக்குக்கொண்டுவர விரும்புகிறேன். அவருடைய அறிவும் அனுபவமும், நாட்டுக்குப் பொதுச் சொத்து.

நான், யோசனைகள் கூறப்போவதில்லை— தேவையுமில்லை. நகராட்சி மன்றத்திலே நுழைய நினைக்கும்போதே, நகரை அழகுபடுத்தவேண்டும், என்ற நன்னோக்கம் ஒவ்வொரு உறுப்பினருக்கும், ஏற்படுகிறது—ஆனால் நாளாகவாக, தமது மனதிலே தீட்டிடும் திட்டங்களை நிறைவேற்ற முடியாமற்போவதையே, உறுப்பினர்கள் உணருகிறார்கள்—பலருக்கு இதனால் சலிப்பும் தட்டிவிடுகிறது. நாவலர் கலியாண சுந்தரனார்போன்றவர்கள்கூறிடும் நற்காரியங்களைத் தேவையற்றன என்று எண்ணுபவர் எந்த நகராட்சி மன்றத்திலும் இருக்கமுடியாது—ஆனால் அவைகளை நடைமுறைத் திட்டமாக்கத்தக்க வசதி நகராட்சி மன்றத்தினருக்குக் கிடைக்கவில்லை — பொருளாதாரவசதி கிடையாது. சின்னாட்களுக்குமுன்பு, நகராட்சி மன்றத் தலைவர்கள், சென்னையில கூடிய போது, இதனை நன்கு எடுத்துக்காட்டினர்—மாகாண சர்க்கார், நகராட்சி மன்றங்களுக்கு, உதவிதர முன்வரவேண்டுமென்று குறிப்பிட்டனர். நிதி மந்திரி கோபால ரெட்டியார், பணம் இல்லை — உங்களிடமும் இல்லை—என்னிடமும் இல்லை —நீங்கள் என்னைக்கேட்கிறீர்கள் — நான் டில்லியைக் கேட்கிறேன் — இருவர் நிலையும் ஒன்றாகவே இருக்கிறது, என்று கூறிவிட்டார். மாகாண சர்க்காருக்கு, நிலவரியும் விற்பனைவரியும் மட்டுமே, உள்ளன — வளரக்கூடிய வருமானவரி முதலியன, மத்ய சர்க்காருக்குப் போய்விடுகின்றன. எனவே, மாகாண சர்க்காரால், நகராட்சிகளுக்குப் பணம் தரமுடிவதில்லை—அந்த உதவியின்றி, உள்ளூரில் வரிவிதிப்பதன்மூலமாகமட்டும், நகராட்சி மன்றங்கள், நகரை அழகுபடுத்தும் திட்டங்களையோ, வேறு பல நற்பயனைத் தரும் திட்டங்களையோ, நிறைவேற்ற முடியாது. இந்தச்சிக்கலைப் போக்குவது எப்படி என்பதுபற்றி நகராட்சி மன்றத்தினர்சிந்தித்தாகவேண்டும். மாகாணங்கள் அதிகமான பொருளாதாரவலிவு பெறுவதற்கான வழிகளையும் யோசிக்கவேண்டும்—நகராட்சி மன்றத்தார், நகரங்களிலேயே, கடன் பத்திரங்கள் வெளியிட்டு பணம் படைத்தோரிடமிருந்துஉதவிபெற்று நகருக்கான பொதுக் காரியத்தைக் கவனிப்பதற்கான, புதிய அதிகாரம் பெறுவது முடியுமா, அதற்கு மாகாண சர்க்கார், சம்மதிக்குமா, என்பது பற்றியும் யோசிக்க வேண்டும். இந்தப்பொருளாதாரப்பிரச்னையின் சிக்கல்தீர்ந்துவிட்டால், நகரைப் புதுப்பிக்கும் நற்காரியங்களைச் சுலபமாகச் செய்யமுடியும் — அதற்கான ஆற்றல் கொண்டவர்களே, நகராட்சி மன்றத்தில் உள்ளனர்.

என்னைப்பற்றிப்பலப்பலபாராட்டி இருக்கிறீர்கள் — அன்பின்காரணமாக—என்நன்றி, இதற்கு" என்று பேசினார்.

சென்னைக் கார்ப்பரேஷனுக்கு (ஆல்டர் உமனாக) தனி உறுப்பினராகத்தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திராணி பாலசுப்பிரமணியம் அவர்களை, நகராட்சி மன்றத்தலைவர் வரவேற்று உபசரித்து, சபையினருக்கு அறிமுகப்படுத்தினர். தோழர் சுப்பிரமணியம் அவர்கள் நன்றி கூற வரவேற்புக்கூட்டம் இனிது முடிந்தது. திரு. வி. க. அவர்களுக்கு, நகரசபை உறுப்பினர்களை, தலைவர் அறிமுகப்படுத்திவைத்தார்.

கட்சி வேறுபாடு காட்டாது, ஈரோடு நகராட்சி மன்றத்தார், அளித்த இந்த வரவேற்புப்பற்றி, ஊரார், பாராட்டிப் பேசினர்.

●

## பட்டம்—பாடம்

15-ம் பக்கத் தொடர்ச்சி

ஜனநாயக நாட்களில், பதவிக்கு வரும்போது, சக்திக்குமீறிய பல திட்டங்களைச் சாதிக்கப்போவதாகக் கூறி, மக்களை மகிழச்செய்து, அவர்களின் ஆசையைக்கிளறி ஆதரவு திரட்டுவது, ஆபத்தான காரியம். ஏனெனில், எழுச்சிக்குரலில் எதையெதைச்சாதிக்கப்போவதாகக் கூறுகிறார்களோ, அவைகளிலே பலவற்றைச்சாதிக்கும்வழிவகையே கிடைப்பதில்லை சொன்னபடி ஏன் செய்யவில்லை, என்றுகேட்டு, போ, பதவியைவிட்டு என்றுகூறிட, உடனே மக்கள், தயாராகிவிடுகின்றனர்.

பிரிட்டனில் ஒரு முறை மன்னராட்சி முறையை முறியடித்துவிட்டு ஆட்சித்தலைவரான கிராம்வேல், என்பவரைக் கண்டுகளித்து, பெருந்திரளான மக்கள், ஆனந்த ஆரவாரம் செய்தனராம், கிராம்வெலின் நண்பர் சிலர், இந்தக்காட்சியைப் பூரிப்புடனும் பெருமையுடனும் அவருக்குக் காட்டி. "தலைவரே! பார்த்தீர்களா, தங்களுக்குள்ள பொதுஜன ஆதரவை" என்று கூறினராம். குறுநகையுடன் கிராம்வெல், "என்னைத் தண்டிக்கத்தீர்மானித்து, ஒருசமயம் தூக்குக்குக்கொண்டுபோனால், இதைவிடப்பெருங்கூட்டமாக இந்தப் பொதுஜனம் திரண்டுவரும்" என்று கூறினாராம்.

பட்டம் தாணுப்பிள்ளையின் வீழ்ச்சி இந்த மகத்தான பாடத்தைக் காட்டுவதாக இருக்கிறது— கருத்துள்ளோர் கவனிக்கவேண்டிய காட்சி, கதர் இருக்க, காந்தி அருள் இருக்க, எப்படி எம்மை வீழ்த்த முடியும் என்று வீம்பு பேசும் நமது ஆளவந்தார்களுக்குக் கூறுகிறோம், பட்டத்தைப் பார்த்துப் பாடம் பெறுக என்று. ✻

திராவிட நாடு

காஞ்சி] 7—11—48 [ஞாயிறு

# வேலைகொடுங்கள்

சர்க்கார், நாட்டு மக்களுக்கு ஏதாவது குறிப்பிடத்தக்க நன்மை செய்திருக்கிறதென்றால், அது, மதுவிலக்கு ஒன்றுதான் என்று கூறலாம்.

இந்த மதியைக்கெடுக்கும் மதுவை சட்டத்தின் மூலம் ஒழித்தாகி விட்டது. இது முழுதும் வெற்றி பெறுவதற்கு மனிதாபிமானமுள்ள எல்லாருமே ஒத்துழைக்கவேண்டும். மது ஒழிந்ததால் மதியுள்ள மக்களுக்கு உண்டாகும்மகிழ்ச்சி மற்றொரு காரணத்தால்மங்கி விடுகிறது. கள்ளிறக்கும் தொழிலில்,மதுவிலக்கிற்குமுன் வரையில், ஈடுபட்டு வந்தவர்கள் வேலை ஏதுவுமின்றி, குடும்பம்குடும்பமாக வேதனையில் ஆழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் பரம்பரை பரம்பரையாக அதே தொழிலில் ஈடுபட்டு வந்தவர்கள். அவர்களுக்கு வேறு தொழில் எதுவும் தெரியாது. இதுவரையில் அவர்களுக்கு வேறுதொழிலைக் கற்றுக்கொள்ளவேண்டிய அவசியமும் ஏற்படவில்லை. எனவே மதுவிலக்கு ஏற்பட்டதும் அவர்கள், வேலை இழந்து, வேறுவேலையைச் செய்வதற்கும் பயிற்சியற்றவர்களாக உள்ளனர். அவர்களுக்கு வேலை தேடித்தரவேண்டிய பொறுப்பு சர்க்காரையே சார்ந்ததாகும். இதுவரையில் சர்க்கார் பெற்றுவந்த கலால் வருமானமான 18½ கோடி ரூபாயில் பெரும் பகுதி இவர்கள் உழைப்பினால் கிடைத்ததாகும். மது ஒழிப்புக்கு முன்னர், மது விற்பனையை ஒழுங்காகக் கண் காணிப்பதற்கு கலால் இலாக்கா ஒன்று பெருந்தொகைச் செலவில் சர்க்காரால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. மதுவிலக்கை நிர்வகிப்பதற்கு ஒரு இலாக்கா இருக்கவேண்டியது அவசியமானாலும், கலால் இலாக்காவிற்குச் செய்யப்பட்டுவந்த அளவிற்குச்செலவிடவேண்டிய அவசியமிருக்காது. எனவே சர்க்கார், ஏற்கனவே அந்த வகையில் செலவு செய்து வந்த தொகையை, இந்தக் கள்ளிறக்குவோரின் வாழ்க்கைநலத்திற்குச் செலவிடவேண்டும்.

நெசவுத் தொழிலை இனி கள்ளிறக்கும் தொழிலாளர்கள் கற்றுக் கொள்வது என்பதும் விரைவில் பயனளிக்கக் கூடிய காரியமுமன்று. குறைந்ததுஓராண்டாவது பிடிக்கும். நெசவுத் தொழிலில்தான் இன்று எங்கு வளம் இருக்கிறது? தேவையான அளவிற்கு நூல் கிடைப்பதில்லை. கிடைக்கும் நூலும் தங்கள் தறியில் நெசவு செய்யமுடியாத நிலையில் இருக்கிறது. நெய்தான துணிகளையும் வாங்குவாரைக் காணோம்.

காஞ்சீபுரம், சேலம், ஆரணி, திருவத்திபுரம் குடந்தை, மதுரை போன்ற முக்கியமான கைநெசவுத் தொழில் நடக்கும் நகரங்களில் எல்லாம், நெசவாளிகளின் அழுகுரல் கேட்டவண்ணந்தானே இருக்கிறது. இந்த நிலையில் கள்ளிறக்கும் தொழிலாளர்கள் நெசவுத்தொழில் கற்றுக் கொள்வதால் ஏற்படும் பலன்தான் என்ன?

உடலுழைப்புச் சிறிதுமின்றி உல்லாச வாழ்வில் உலகநிலையை மறந்து, உழைத்துப் பாடுபடுபவர்களை உதாசீனப்படுத்தும் பண்போடு கூடியவர்களின் இனாம் நிலங்களைத் தொடக் கூடாது-பாவம் நேரிடும் என்ற போக்கிலே நடந்துகொள்ளும் சர்க்கார், அன்றாட வாழ்க்கையை அளந்து காலங்கழித்துக் கொண்டிருந்த — இருக்கின்ற கள்ளிறக்கும் தொழிலாளருக்கு, அவர்களின் வாழ்க்கைக்குப் போதிய அளவுக்காவது நிலங்களை இனாமாக வழங்குவதில் எந்த விதமான தடையும் வந்து குறுக்கிட்டுவிடாது. அதுவுமன்றி, ஜெமீன் ஒழிப்பால் பாதிக்கப்பட்டோரும் பசி என்றால் என்ன என்று அறியாதவர்களுமான ஜெமீன்தாரர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்குப் பலகோடி ரூபாயைக் கொடுத்தாக வேண்டுமென்ற போக்கில் உள்ள சர்க்கார், மதுவிலக்கால் பரிதாபத்திற்குரிய நிலையை அடைந்துள்ள தொழிலாளர்களுக்கு, அவர்களின் அன்றாட வாழ்க்கையை ஓரளவுக்காவது ஒழுங்காக நடத்திச் செல்லக்கூடியதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து செய்யலாம். அல்லது ஜெமீன்தாரர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது போல், கள்ளிறக்கிய தொழிலாளர்க்கும், நஷ்ட ஈடு கொடுக்கலாம். அல்லது இந்தத் தொழிலாளர்கள் பெற்றுவந்த சம்பளத்தைக் கணக்குப்பார்த்து, பத்து ஆண்டுகள் அவர்கள் பெறக்கூடிய சம்பளத்தை நஷ்டஈடாகக் கொடுத்து அவர்களின் நிலையை உயர்த்தலாம். நாம் கூறும் இந்த யோசனைகளைச் சர்க்கார் ஏற்று அதன்படி ஏதாவது பரிகாரம் செய்தாலன்றி, இவர்களின் இரங்கத்தக்க நிலையை மாற்றமுடியாது. எனவே, சர்க்கார் இத்துறையில் சிறிது கவனம் செலுத்துவது, அவதிக்குள்ளாகி இருக்கும் இத்தொழிலாளர்களின் குறையைப் போக்குவதற்கு ஏற்ற செயலாகும்.

அவர்கள் நல்ல உழைப்பாளிகள். தேகக் கட்டுடையவர்கள், பயிர்த் தொழிலில் அவர்களை ஈடுபடச் செய்வதும், அதற்கான பயிற்சியை அவர்களுக்கு அளிப்பதும், உடனடியாக அவர்கள் பயனடைய வழி ஏற்படும். இதனால் அவர்களுக்கு வாழ்வழி ஏற்படுவதோடு, உணவு உற்பத்தியும் அதிகரிக்கும். கூட்டுப் பண்ணை முறையை அமுலுக்குக் கொண்டு வருவதால், இயந்திர சாதனங்களை உபயோகித்து, நவீன முறைகளைக் கையாண்டு, பலனைப் பலமடங்கு பெருகும்படி செய்யலாம். சென்னை மாகாணத்திலுள்ள ஒவ்வொரு தாலுக்காக்களிலும், சர்க்காரேமுன் வந்து, கூட்டுப்பண்ணைகளைச் சொந்தத்தில் ஏற்படுத்தி, வேலை இழந்து தவிக்கும் இந்தத் தொழிலாளர்களுக்கு வேலை கொடுத்து மூல உணவுப்பொருளை அதிகரிக்கச் செய்வதின்மூலம், இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுநெருக்கடியைக்குறைக்கலாம். கள்ளிறக்கும் தொழிலாளர்கள்மட்டுமல்லாமல், வேறு வேலையற்றுக்கிடக்கும் பலருக்கும் இதனால் வேலை கிடைக்க ஏதுவேற்படும்.

இது, நீண்டகாலம் கழித்துத்தான் பலன் கொடுக்கக்கூடிய தொழிலுமன்று. நான்கைந்து மாதங்களிலே நல்ல பலனை, எதிர்பார்த்தபடி கொடுக்கக் கூடியதொழிலாகும்.

இதற்கான தகுதியுடைய நிலப்பரப்பு இங்கு இல்லை என்று சொல்வதற்குமில்லை. சாகுபடிக்கேற்ற, கவனிப்பார் அற்றுக் கிடக்கும் கரம்பு நிலங்கள், நமது நாட்டில் ஏராளமாகக் கிடக்கிறது. கள்ளியும் முள்ளியுந்தான் இன்று அங்கு பயிராகின்றன. இதனைத் திருத்தஞ்

செய்து, பலன் தரும் பண்ணைகளாக மாற்றுவது, மக்கள் பெயர் கூறி மன்றமேறியுள்ளவர்களின் முதற் கடமையாகும். இதற்குச் செலவாகும் பணத்திற்கு எங்கே போவது என்று அமைச்சர்கள் கவலை கொள்ள வேண்டியதில்லை. தங்கள் சம்பளத்தை, காந்தியார் அன்றிட்ட கட்டளைப்படி குறைத்துக்கொண்டு, அதனால் மீதமாகும் பணத்தை இதற்கு முதலாக்கலாம். துணிவும், பொதுப்பணம் எந்தெந்த வகையில் செலவழிக்கப்படவேண்டுமென்ற யூகமும் இருக்குமானால், தம்பிரான்கள் சொத்தில் கொஞ்சமும், ஆலயங்களிலே வீணுக்கு முடங்கிக் கிடக்கும் செல்வத்தில் சிறிய அளவும் எடுத்துக்கொண்டாலே, இதற்குப் போதுமானதாகும். என்ன செய்கிறார்களோ பார்ப்போம்!

காங்கிரஸ் தியாகிகளுக்கு நிலம் கொடுத்தார்கள். அவர்களில் பெரும்பாலோர் ஏற்கனவே ஏதாவதொரு தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களேயன்றி, கள்ளிறக்குவோர் போன்று வேலை போனதும் வேறுவகை தெரியாது விழித்துக்கொண்டிருப்பவர்களன்று. அத்தகையவர்களுக்கு நில இனாம் வழங்கினபோது, தானம் பெற்றாலன்றி வேறுவழி இல்லை என்ற நிர்ப்பந்தத்திலுள்ள இவர்களுக்கு நிலம் இனாமாக வழங்குவது குற்றமுடையதாகாது. இது தேசியத்திற்கும் புறம்பான செயலன்று. பசித்தவனுக்கு உணவளிப்பதுதான் முதற்செய்ய வேண்டிய செயலாகும்.

ஆளவந்தார்கள், மக்களுக்குநலஞ் செய்யவே நாடாளுகிறோம் என்று சொல்லிக்கொள்வது உண்மையாக இருக்குமானால், இந்த நல்ல காரியத்தை நடைமுறையில் காட்டட்டும்.

## அறப்போர்க் குறிப்புகள்

6-ம் பக்கத் தொடர்ச்சி

வேதாந்திகளின்பேச்சால், ஒருவகை மயக்கம், சபலம்—அசட்டுத் தைரியமும் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. கழகத்தைக் கலைத்தாலன்றி கவலை தீராது என்று பேசுகிறார்களாம் சிலர்—சட்டவிரோதமானது என்று கூறிவிடலாமே என்கிறார்களாம் பலர். மந்திரி சபையினரின் போக்கு, இன்னும் தெளிவாகவில்லை—அங்கு சர்வம் குழப்ப மயம்!! இது போதாது, மார்வாடிக் கடைகளிலே மறியலைத் துவக்கவேண்டும், என்று திராவிடர் கழகத்தவரிலே ஆர்வமிக்க ஓர் பகுதியினர், தலைவரிடம் வலியுறுத்தியபடி உள்ளனர். கோயில்பட்டியிலே உள்ள கழகத் தலைவர் தோழர் வள்ளிமுத்து மீதும் மற்றும் பல நண்பர்கள் மீதும், 107.வது செக்ஷன்படி, நன்னடக்கை ஜாமீன், ஒரு வருஷத்துக்குத் தரவேண்டுமென்று வழக்குத் தொடர்ந்துவிட்டார்கள். இதே முறையைப் பின்பற்றி, ஒவ்வொரு ஊரிலும் உள்ள கழக முக்யஸ்தர்கள் மீதெல்லாம், நடவடிக்கை எடுக்கலாம், என்பதும் சர்க்காரின் திட்டமாகலாம் என்று கூறுகிறார்கள். ஒவ்வொரு ஊரிலும் யாரோ ஒரு ஆறு பேர் மட்டுந்தான், இருக்கும் நிலை, கழகத்துக்கு என்றால், சர்க்கார் இந்தத் திட்டத்தை நடத்திப் பார்க்கலாம். ஆனால் ஆறு பேர் உள்ளே தள்ளப்பட்டால் அறுபது பேர் அதே இடத்திலே, வந்து நிற்பார்கள்—இது கழகத்தின் நிலைமை. இந்த நிலைமையை 107-வது செக்ஷனின் துணையைக்கொண்டு, சமாளித்துவிட முடியாது. சர்க்கார், விஷப்பரீட்சைகள், எதுசெய்து பார்ப்பதானாலும் நமக்குச் சம்மதமே—எதுவும், அவர்களை நோக்கி வேக வேகமாகக் கிளம்பிவரும், கண்டன அலையைத் தடுக்கப் போவதில்லை. இதனை நன்கு உணர்ந்திருப்பதால்தான் அறப்போர் வீரர்களின் ஆர்வம் அதிகரித்தவண்ணம் இருக்கிறது — வளர்ந்துகொண்டேதான் போகும் இந்த ஆர்வம்.

அறப்போருக்கான சூழ்நிலை, சில நாட்கள் ஓய்வு இருந்ததால், கெட்டுவிட்டிருக்குமோ என்ற கவலை, கழகத் தோழர்களுக்கு இருந்தது; ஆனால், அறப்போர் துவக்கப்பட்டதும், அந்தக் கவலை மறைந்தது. எப்போதும் போலவே ஆர்வம் தோன்றிற்று.

* * *

முத்தியாலுப்பேட்டை பள்ளிக்கூடத்தின், இட அமைப்பு, சர்க்காரின் நோக்கத்துக்கு மிகவும் உதவியாக இருக்கிறது. சர்க்காருடைய நோக்கமெல்லாம், இந்தி எதிர்ப்புக்கு எவ்வளவு ஆதரவு இருக்கிறதென்பது, பொதுமக்களுக்குத் தெரியக்கூடாது என்பதுதான். சென்னையில் எவ்வளவுபெரியகிளர்ச்சிநடைபெற்றாலும் வெளியூர்களுக்கு உண்மை நிலைமை தெரியாதபடி தடுத்துவிடும் திருப்பணியைத் திறம்பட நடத்த ஏராளமான பத்திரிகைகள் உள்ளன. சென்னைக்குள்ளேயே, நிலைமை மக்களுக்குத் தெரியாதபடி செய்வதற்குச் சர்க்கார் மிகுந்த பிரயாசை எடுத்துக் கொள்கிறார்கள். மக்களின் கண்களுக்கு மறியல் நடைபெறுவது தெரியாதிருக்குமானால், அவர்களின் கருத்தையும் குருடாக்கிவிடலாம் என்பது சர்க்காரின் நோக்கம். இந்தக் குருட்டறிவின் துணைகொண்டா காங்கிரஸ் மந்திரிகள் வாழ நினைக்கிறார்கள் என்று கேட்பீர்கள். என்ன செய்வது—வாழவேண்டுமே அவர்கள், அதற்காக, எத்தகைய வழியானால் என்ன என்ற துணிவு கொண்டுவிட்டார்கள். எப்பாடு பட்டேனும், இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் வேகம் பரவாதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமென்று திட்டமிட்டு வேலைசெய்கிறார்கள். பத்திரிகைகளோ இருட்டடிப்புச் செய்கின்றன, பொதுமக்களுக்கு மறியல் காட்சியே கண்களுக்குத் தெரியாதபடி செய்யப்பட்டு விடுகிறது, இந்நிலையில், இந்தி எதிர்ப்புக் கவனிப்பாரற்றுப் போகும், அந்த நிலை, இந்தி எதிர்ப்பு இயக்கத்தினருக்குக் கவலையைத் தரும், இப்படி நடத்திக்கொண்டிருந்து என்ன பலன், என்று எண்ணி அவர்களாகவே, மறியலைநிறுத்திவிடுவார்கள் என்பது சர்க்காரின் நோக்கம். நிறுத்தாவிட்டாலும், இப்படி பரபரப்பு இல்லாத நிலை கண்டு சலித்து, இபக்கம், 'மூலை வாரி'—அதாவது பரபரப்புக்காகத் தாறுமாறாகக் காரியங்களைச் செய்யத் தொடங்கும், அப்போது அதன்மீது பழிசுமத்தி விடலாம்—சுலபத்திலே அழித்துவிடலாம், என்பதும், சர்க்காரின் நோக்கம். இந்த நோக்கத்திற்கேற்பவே சர்க்காரின் நடவடிக்கைகள் உள்ளன. ஆனால் அதேபோது, இந்த பரபரப்புஅற்ற சூழ்நிலையைத் திராவிடர் கழகம் எப்படிப் பயன்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டிருக்கிறது என்பதுபற்றிச் சர்க்கார் எண்ணிப் பார்க்கவே இல்லை. ஒற்றைக்கண்ணன் போல், சர்க்காருக்கு தனது திட்டம்தான் தெளிவாகத் தெரிகிறது — மற்றவரின் திட்டம் தெரியவில்லை. பரபரப்பற்ற இந்தச் சூழ்நிலையை, அமைதிக்கு அடிப்படையாகக் கொண்டு, திராவிடர் கழகம், மேலும் பல பள்ளிக்கூடங்களிலும் மேலும் சில ஊர்களிலும், இந்தி எதிர்ப்பு மறியலை நடத்தத் திட்டமிட்டு வருகிறது. சர்க்காரின் போக்கிலே இதே நிலை இருக்குமானால், விரைவில் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலேயும் மறியல் நடைபெறச் செய்ய வழி ஏற்படும்—எல்லா ஊர்களிலும்; அடையாள மறியல், எல்லா ஊர்களிலும், எவ்வளவு வெற்றிகரமாக—கண்ணியமாக நடைபெற்றது என்பதைச் சர்க்கார் அறிவார்கள். அன்று ஒவ்வொரு முக்கியமான ஊரிலும் மறியலை நடத்தியவர்கள், தத்தமது ஊரில், தொடர்ந்து மறியலை நடத்தத் துடித்துக் கொண்டுதான் உள்ளனர். வழக்கம் போலத் தொண்டர்கள், முத்தியாலுப்பேட்டைப் பள்ளிக்கூடத்திலே, சென்று, இந்தி ஒழிக—தமிழ் வாழ்க — என்று முழக்கமிடத் தொடங்கினர் — மக்கள் நெடுந்தூரத்திலேயே நிறுத்திவிடப்பட்டனர், போலீசாரால். போலீஸ் ஏராளம்—மலபார் போலீஸ் உட்பட—பல இன்ஸ்பெக்டர்கள், பொதுமக்கள், பள்ளிக்கூடம் இருக்கும் திக்கு நோக்கியும் போகாதபடி பார்த்துக்கொண்டனர். உதவிக் கமிஷனர் தோழர் சுகுமாரன், மேற்

பார்வை செய்துவந்தார். பொதுமக்களின் கண்ணோட்டம் தம்மீது இல்லை என்ற போதிலும், மறியல் தொண்டர்கள், தமது கடமையைக் களிப்புடனும் பொறுப்புணர்ச்சியுடனும் செய்தனர்—கனிவான வேண்டுகோள் — பணிவான வணக்கம் தெரிவித்தல், இவைகளே தொண்டர்களின் முறைகள்.

* * *

முத்தியாலுப்பேட்டைப் பள்ளி மறியலில் ஒரு சிறு சங்கடம் இருப்பதை நாங்கள் துவக்க நாளன்றே தெரிந்துகொண்டோம். பள்ளிக்கூட •வாயற்படியருகே, நிழலுக்கு வழியே இல்லை—எனவே கடுமையான வெயிலிலே, தொண்டர்கள் நின்றுகொண்டு பணிபுரிய வேண்டி நேரிடுகிறது. வியர்வை பொழியப் பொழிய, அவர்கள் அங்கு நின்றுகொண்டிருப்பது கண்டு, மனந்தாளாத சில நண்பர்கள் அவர்களுக்கு நிழல்தாக் 'குடை' பிடிக்கச் சென்றனர்—குளிர்ந்த முகத்துடன், தொண்டர்கள் இது வேண்டாம் என்று கூறிவிட்டனர். வெயிலிலேயேதான் நின்றுகொண்டிருக்கிறார்கள்—அம்மையார் உட்பட. மாணவர்கள், இக்காட்சியைக் கண்டு மனம் உருகுகின்றனர்—நமது எதிர்கால வாழ்க்கையை வளமாக்குவதற்காக அல்லவா, இவர்கள் இப்படி இடர்ப்படுகிறார்கள் — பாழான இந்தியின் நுழைவினால் அல்லவா இவர்கள் இவ்வளவு கஷ்டப்படுகிறார்கள், என்று பதறினர். தங்கள் நோக்கத்தை அவர்கள், தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! என்ற முழக்க மூலம் தெரிவித்துக் கொண்டனர். இந்தி படிக்கமாட்டோம்! —என்று கூறிவிட்டுத்தான் பெரும்பாலான மாணவச் சிறுவர்கள், பள்ளிக்குள் சென்றனர். , ஆசிரியர்கள், பள்ளிக்கு உள்ளே பல பகுதிகளில் நின்றபடி, வெளியே நடைபெறும் மறியலைப் பார்த்துக்கொண்டிருந்தனர். தலைமை ஆசிரியர் தோழர் பெருமாள் அவர்கள், மறியலைக் கண்டார்—மாணவர்களையும் கண்டார்—அவர் மனதிலே என்ன எண்ணிக்கொண்டாரோ, யார் கண்டார்கள்! ஒரு மணி நேர மறியலுக்குப் பிறகு, தோழர்கள் திரும்பலாயினர்—அதுவரை, போலீசின் தடைக் கோட்டையில் அடைபட்டிருந்த பெருந்திரள், இந்தி ஒழிகஎன்றபேரொலியுடன், பாய்ந்தோடிவந்தனர், தொண்டர்களின் பக்கம். போலீஸ் மீண்டும் தடுத்து நின்றது. கழகத்தொண்டர்களும் அமைதி —அமைதி — என்று கூறி, ஆர்வமிக்க மக்களை, வேறுபக்கம் செல்லுமாறுபணித்தனர். மறியல் ஒவ்வொருநாளும் இது போன்றே ஒழுங்காக நடைபெற்று வருகிறது.

* * *

ஒருயோசனை! — என்று பேச்சைத் துவக்கினார் நண்பரொருவர். என்ன? என்று கேட்டேன்.

"இந்தி ஆசிரியர் வீட்டிலே சென்று மறியல்செய்ய......" என்று பேசலானார்.

"நமது திட்டம் அதுஅல்லவே, இப்போது" என்றேன் நான்.

"நமது கழகத்திலே அந்தத்திட்டம் இல்லை, ஆனால், இந்தி கூடாது என்று எண்ணும் தமிழன்பர்சிலர் இந்திஆசிரியர் வீட்டிலே மறியல்செய்யப் போவதாகக் கேள்வி. நாமே அவ்விதம் செய்தால் என்ன?" என்று கேட்டார்.

"தம்பி! உன் ஆர்வம் வரவேற்கத்தக்கதுதான், ஆனால் இப்போது இதற்கு என்ன அவசரம்?" என்றேன் நான்.

"அவசரமில்லை. நாம்ஆரம்பித்துநடத்துவதற்குள், வேறுயாரேனும், இந்தி ஆசிரியர் வீட்டிலே மறியலைத் துவக்கிவிட்டால் என்ன செய்வது?" என்று கேட்டார்.

' நாம் அதற்கு என்னப்பா செய்வது— யாராருக்கு ஆர்வமிருக்கிறதோ, நாமகண்டோமா! சிலர், நீ கூறுவதுபோல, இந்தி ஆசிரியர் வீட்டிலே மறியல் செய்யக்கிளம்பக்கூடும்—வேறுசிலர், இவ்வளவுக்கும் காரணமான, கல்விமந்திரி அவனாசியார் வீட்டிலே மறியல் செய்யக்கூடும், இதற்கெல்லாம் ஒரு அளவு ஏது?" என்றேன் நான்.

"நானும் அதைத்தான் சொல்கிறேன்— நாமே ஏன் அதைச்செய்யக்கூடாது?" என்று மீண்டும் கேட்டார்.

"இப்போதைக்கு நமக்கு அந்தத்திட்டம் இல்லை—வேறுயாரேனும் அவ்விதமான திட்டத்தை மேற்கொண்டால், நாம் 'தடுக்கவும் போவதில்லை" என்று நான் சொன்னேன்.

* * *

மறியலை, மௌனத்தாலேயோ, ஏளனத்தாலேயோ, சாகடித்துவிடலாம் என்று எண்ணும் சர்க்காருக்கு, மக்களின் மனம் என்னென்ன திட்டமிட்டபடி இருக்கிறதென்பதைக் காட்டவே இதைக் குறிப்பிட்டேன். அறப்போருக்கு உள்ள ஆதரவு, நாளுக்கு நாள் வளர்ந்தபடி தான் இருக்கிறது.

* * *

அன்றுமாலை நாங்கள், கடலோர வாய்க்காலில், படகேறிக் கொஞ்சநேரம், ஓய்வு தேடினோம். ஆடி அசைந்துகொண்டு, படகு சென்றது. மேலே வானம் இருளைத்தழுவியவண்ணம் இருந்தது. எங்கள் படகு, மெள்ளச் செல்லும்போது, பக்கத்திலே உள்ள பாதையை அடுத்து ஒரு சிறு மாளிகை வாயலில், துப்பாக்கியும் கையுமாக மூன்று நான்கு போலீசார் காவல் புரிந்து கொண்டிருந்தனர் — கூவம் மாளிகை அது—முதலமைச்சரின் இருப்பிடம். படகிலிருந்தபடி அந்த மாளிகையைப் பார்த்தேன்—அந்த மாளிகை வாசியின் திட்டம், தமிழகத்திலே எவ்வளவு தத்தளிப்பை ஏற்படுத்திவிட்டது என்பதை அறியாமலிருக்கிறாரே, என்று எண்ணி ஏங்கினேன். மாலை நேரத்தில், கடற்கரையிலே உலவியும், படகு ஏறியும் படக்காட்சிகள் கண்டும், குடும்பத்திலே குதூகலமாக உரையாடியும், காலங் கழிக்கவேண்டிய காளைகள், கடும் வெயிலில் நின்று, ஒவ்வொரு நாளும் தமிழைக் காக்கத் தவம் செய்கிறார்களே, என்று எண்ணி ஏங்கினேன். ஒரு தமிழர் முதலமைச்சராகவந்ததும், தமிழுக்கு ஆபத்தும், தமிழ் இளைஞர்களுக்குத் தொல்லையுமா அவர்தரும் பரிசுகளாக அமைய வேண்டும் என்று எண்ணி ஏங்கினேன். மிகமிக அற்ப விஷயத்திலே அக்கரை எடுத்துக்கொள்ளும் அமைச்சர்கள், அறப்போர் தொடுக்கவேண்டிய அளவுக்கு, மொழிப்பிரச்னை சிக்கலாகியிருப்பதை உணர மறுக்கிறார்களே, இது ஏன்? என்று யோசித்தேன். நாம் அறப்போர் நடாத்துவதால், தங்களுடைய பதவிக்கு ஒருவிதமான ஆபத்தும்வரப்போவதில்லை, பதவி இருக்குமட்டும், நாம் மற்றஎதைப் பற்றியும் கவலைப்பட வேண்டியதில்லை என்று எண்ணுகிறார்கள்போலும், என்று எண்ணினேன். மக்களின் உரிமைகளை, ஜனநாயக சர்க்காரிலே அதிகமாகப் பெற முடியும் என்ற அரசியல் தத்துவத்தையே இவர்கள், பாழ்படுத்துகிறார்களே, என்று எண்ணினேன். படகிலிருந்து கீழே இறங்கி, கடலோரம் சென்று அமர்ந்தோம். அலைகள், புரண்டோடிவந்து, எங்கள் காலைகளைமுத்தமிட்டுவிட்டு மீண்டும், ஓடிச்சென்றன. அங்குமிங்கும், ஆடவரும் பெண்டிரும், குழந்தைகளும், பெரியவர்களும், உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தனர்—தமிழில்—இனிமைத்தமிழில்! இந்த இனிமைத்தமிழ், இந்திநுழைவை நாம் அறப்போர்புரிந்து தடுக்காவிட்டால், இதே கடற்கரையிலே, இன்னுமோர் பத்தாண்டுகளுக்குப்பிறகு, நாம் கேட்க முடியுமா! சீரிளமைத்திறம் வியந்து வாழ்த்தினார் பேராசிரியர் சுந்தரனார், தமிழை! தமிழ், பலதடைகளைத் தாண்டி இருக்கிறது — ஆபத்துகள் சூழ்ந்த போதெல்லாம், தமிழ் எப்படியோ தன்னைக் காப்பாற்றிக்கொண்டிருக்கிறது— இப்போது இந்தியினால் வந்துள்ள ஆபத்தைத் தமிழ் வெல்லவேண்டுமே—வென்றால்தானே, அதோ ஒலிக்கும் இனிமைத் தமிழ் இவ்விடத்திலும், தமிழகமெங்கணும், இனியும் இருக்கும்—இந்தியை அனுமதித்தால்—அரசியல் அந்தஸ்து இந்திக்குக் கிடைத்து விட்டால், பிறகு, தமிழின் இடம், ஏது? யார் தமிழைப் போற்றுவர்! அரசாங்க மொழியன்றோ, பிறகு அலுவல்மொழியாகும், அலுவல் மொழியானால், பிறகு அனைவரும் அதன் துணைபெற்றால் தான் வாழமுடியும் என்

(12-ம் பக்கம் பார்க்க)

# கோலாப்பூரில் மூண்ட தீ

காந்தியார் கொலை செய்யப்பட்டதால், நாட்டு மக்கள் மனதிலே மூண்ட கொதிப்பு, கோலாப்பூர் சமஸ்தானத்திலே, விபரீதமான முறையிலும் அளவிலும் சென்றது. கோலாப்பூர், மராட்டியர் வாழும் மண்டலம். காந்தியாரைச் சுட்டுக் கொன்றவன், கோட்சே எனும் மராட்டியப் பார்ப்பனன் என்றதால், அந்தச் சமஸ்தானத்திலே, மற்றப் பகுதியிலே இருந்ததைவிட அதிகமான கொதிப்பு ஏற்பட்டது. பார்ப்பனர் தாக்கப்பட்டனர்—அவர்களின் சொத்துகள் சூறையாடப்பட்டன—அக்ரஹாரங்கள் கொளுத்தப்பட்டன. இந்த நிலைமை விரைவிலே கட்டுக்குக் கொண்டுவரப்பட்டது என்றபோதிலும், அந்தப்பகுதியின் பார்ப்பன சமூகத்துக்குப் பெரும் பீதி ஏற்பட்டுவிட்டது. இனித் தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து நேரிடக் கூடும் என்று அஞ்சலாயினர்.

பொதுமக்கள் ஆத்திரப் புயலால் துரத்தப்பட்டு இப்படிப்பட்ட காரியங்களைச் செய்தால், அதனை அடக்க, போலீசும் ராணுவமும், இல்லையா-சமஸ்தான சர்க்காருக்கு இந்தச் சக்தி கூடவா கிடையாது-இவ்வளவு கலவரமும் நடைபெற்றதற்குக் காரணம், சர்க்காரும், இந்தக் கலகத்துக்கு உடந்தையாகவேனும் இருந்திருக்கவேண்டும், அல்லது 'ஏனோ தானோ' என்றேனும் இருந்திருக்க வேண்டும், என்று கருதினர்—அதுபோலவே, மத்ய சர்க்காருக்கும் புகார்களும் மனுக்களும் குவிந்தன.

அக்ரஹாரங்கள் தீக்கிரையாவதா! பார்ப்பனர்கள் வேட்டையாடப்படுவதா! பிரம்மஹத்தி புரியவும் பாவிகள் துணிந்துவிட்டனர்! என்றெல்லாம், கோபக் குரலொலிகள் கிளம்பின. மத்யசர்க்காரின் கவனம் கோலாப்பூரின் பக்கம் திரும்பிற்று.

"இந்தக் கலகம் நடைபெற்றதற்குக் காரணம் என்ன? பார்ப்பனர்களை இம்சிக்க ஏதேனும் முன்னேற்பாடு நடந்ததா? அப்படி ஏதேனும் சதித் திட்டம் இருந்ததா? சமஸ்தான மந்திரிகள் இதிலே சம்பந்தப்பட்டிருந்தனரா?"-என்பன போன்றவைகளை விசாரித்தறிய ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது; அதற்குத் தலைவராக கோயாஜி எனும் ஜட்ஜு நியமிக்கப்பட்டார்.

கலவரம் நடைபெற்றபோது சமஸ்தான முதலமைச்சராக இருந்தவர் வி. கே. பகால் என்பவர்.

கமிட்டி தன் விசாரணையை நடத்தி, அறிக்கை வெளியிட்டிருக்கிறது, அதன் சாரம் அக்டோபர் 27ந் தேதிய பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது.

"இந்தக் கலவரத்துக்கு அடிப்படையான காரணம், இந்தப் பகுதியிலே பல ஆண்டுகளாக இருந்துவரும் பார்ப்பன எதிர்ப்பு உணர்ச்சிதான்"

என்று கமிட்டி கூறுகிறது.

கமிட்டி, "இந்த உணர்ச்சியை மூட்டிவிட்டபடி பல தலைவர்கள் இருந்தனர்" என்றும் தெரிவிக்கிறது. ஆனால், பார்ப்பனர்களைக் கொடுமைக்கு ஆளாக்க, சதியோ, முன்னேற்பாடோ, நடைபெறவில்லை, என்றும் கமிட்டி தெரிவிக்கிறது.

ஆனால், இந்தக்கலவரங்கள் நடைபெறுவதைக் கண்டும் காணாதது போல இருந்துவிட்டார் முதலமைச்சர்—தகுந்த நடவடிக்கைகளை எடுத்து உடனடியாகத்தடுப்பு முறைகளைக் கையாளவில்லை என்று தெரிய வருவதால், முதலமைச்சர், இந்தக் கலவரத்துக்கு உடந்தையாக இருந்தார் என்றே கூறவேண்டும், என்று கமிட்டி கூறியிருப்பதுடன், மேலும் 3 மந்திரிகளையும், இதே குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கி இருக்கிறது.

கமிட்டியிடம் தரப்பட்ட தகவல்கள், சேகரித்த வாக்குமூலங்கள், கூறப்பட்ட சாட்சியங்கள், இவைகள் பத்திரிகைகளிலே வெளிவரவில்லை. கமிட்டியின் முக்கியமான முடிவுமட்டுமே வெளியிடப்பட்டிருக்கிறது.

காண்டேகர், சார்நாயக், காசிர்கானிஸ், எனும் மூன்று மந்திரிகளும், கலவரத்துக்கு உடந்தையாக இருந்ததாகவும், கமிட்டி கூறுகிறது. இந்த மூவரும் முதலமைச்சரும், கோலாப்பூர் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். வேறு மூன்று மந்திரிகள், மகாராஜாவாலேயே, நியமனம் செய்யப்பட்டவர்கள். அவர்கள் மீது இவ்விதமான குற்றம் இல்லை என்றும் கமிட்டி கூறுகிறது.

பலஆண்டுகளாக, கோலாப்பூர் சமஸ்தானத்திலே, பார்ப்பன எதிர்ப்புப் பிரசாரம் நடைபெற்று வந்திருக்கிறது, என்ற "சேதியே" நமக்கெல்லாம் புதிது. அவ்வளவு சாமர்த்தியமான இருட்டடிப்பு நடைபெற்றிருக்கிறது, பத்திரிகைகளால். கமிட்டி கூறித்தான் நமக்குத் தெரிகிறது, பொதுமக்களின் அபிமானத்தைப் பெற்ற பல தலைவர்கள், இந்தப் பிரசாரத்தை நடத்தி வந்திருக்கிறார்கள், என்ற தகவலும்.

கலவரத்துக்கு உடந்தையாக இருந்ததாகக் கூறப்படும் முதலமைச்சரும் மற்ற மூன்று மந்திரிகளும், பொதுமக்களால்தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் என்று கூறப்படுவதிலிருந்து, இவர்களுக்குப் பொதுஜன ஆதரவு இருந்திருப்பதும் விளக்கமாகத் தெரிகிறது.

ஆகவே, கோலாப்பூரிலே இந்தக் கலவரத்தின்போது, பொதுமக்களில் மிகப் பெரும்பான்மையினர், இப்படி நடைபெறுவது, நாம் எதிர்பார்த்ததுதான் என்றோ, இந்த அக்ரமக்காரர்களுக்கு இதுவும்வேண்டும் இதற்கு மேலும் வேண்டும் என்றோ, கருதும் மனப்பான்மை கொண்டவர்களாகவே இருந்திருப்பர், என்று ஏற்படுகிறது. அதாவது அந்தச் சமஸ்தானத்தில் அவ்வளவு அதிகமான அளவில் பார்ப்பன எதிர்ப்புணர்ச்சி குமுறிகொண்டிருந்திருக்கிறது. எரிமலை திடீரெனத் தீயைக் கக்குவதுபோல, ஏதோவோர் மனதை உலுக்கும் சம்பவம் நேரிட்டதும், அந்தக் கொதிப்புணர்ச்சி, விபரீதமான உருவமெடுத்தது, அக்ரஹாரங்களில் தீமூட்டப்பட்டன.

கமிட்டியின் வேலை முடிந்தது—இனி, மேற்கொண்டு, குற்றம் சாட்டப்பட்ட முதலமைச்சருக்கும் மற்ற மூன்று மந்திரிகளுக்கும் என்னவிதமான தண்டனை தரப்படுமோ நாம் அறியோம். ஆனால் கமிட்டி கூறுவதிலிருந்தே, நாம் யூகிக்கலாம், இந்த மந்திரிகளைத் தண்டிக்க முற்பட்டால், சமஸ்தான பக்கலில் மிகப் பெரும்பாலானவர்களின் மனம் கொதிப்படையும் என்பதை—ஏனெனில் அவர்களெல்லாம், பொது

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

கமிட்டியின் வேலை முடிந்துவிட்டது, கலவரம் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டுவிட்டது. ஆனால் பிரச்னை முடிந்துபோகவில்லை, என்பதை நாடாள்வோர் அறியவேண்டும்.

பார்ப்பன எதிர்ப்புணர்ச்சி எப்படி ஏற்படமுடிகிறது?—சிலர் அதேபிரசாரம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது சரி, ஆனால், பாறைமீது தூவும் விதை பயிராகாது, வளமான நிலத்திலும் பதரைத்தூவினால் பயிர் உண்டாகாது! எந்தப்பிரசாரமும், தகுந்த காரணம் இல்லாமல் எழாது—தகுந்தகாரணம் இல்லாவிட்டால், மக்கள் மனதிலே நில்லாது—உருவெடுக்காது. இதைநாடாள்பவர்கள் நன்றாக அறியவேண்டும். பார்ப்பன எதிர்ப்புணர்ச்சி உண்டாக முடிவதற்குக்காரணம், ஜாதிமுறையும் அதன்விளைவுகளும்தான் என்பதை அறியவேண்டும். மக்களின் மதி துலங்கிவரும் இந்நாட்களிலே, வர்ணாஸ்ரமத்தை ஏமாளிகளன்றிப்பிறர் ஏற்றுக்கொள்ளார். அந்தப் பழைமையைவிடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டு ஒருசாரார் இருக்கும் வரையில், அதற்குப் பாதுகாப்புத் தரும் முறையில் பற்பல ஏற்பாடுகள் இருக்கும்வரையில், எதிர்ப்புணர்ச்சி இருக்கத்தான் செய்யும். மலேரியாக் காய்ச்சல் கொண்டவனுக்கு ஜுரம் போன பிறகும்கூட, உடலில் முழுத் திடம் வரும் வரையிலே, வாய்க் கசப்பு இருக்கிறது — அந்தக் கசப்பைப் போக்க, அவ்வப்போது கொஞ்சம் கனிரசம் தந்து பலன் என்ன? அதுபோல, ஜாதிப் பித்தம் கொண்டுள்ள மக்களுக்கு, அவ்வப்போது உபதேசங்கள் அருளுவது பலன் தராது. தேசீயத்தைவிட இனிக்கும் தேன் வேறு கிடைக்கவா போகிறது! அந்தத் தேனைக் கொடுத்துப் பார்த்தும்கூடப் பலன் காணவில்லை. இதனை அறிந்து நாடாள்வோர், ஜாதி முறையை, பழைமையைப் பித்தத்தைப் போக்கவேண்டும். அது தான் கோலாப்பூர் சம்பவங்களிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டிய பாடம்.

கலவரங்களுக்கு உடனடியாகத் தெரியும் காரணங்களைக் கண்டறிவதும், கமிட்டி நியமிப்பதும், யாரோ சிலர்மீது உடந்தைக் குற்றம், தூண்டுதல் குற்றம் போன்றவைகளை ஏற்றுவதும், சுலபம் — ஆனால் இவைகளால் பிரச்னைகள் தீர்ந்துவிடாது. சமுகத்திலே உள்ள ஜாதிப் பித்தம் போக்கப்படவேண்டும் - இதுபற்றிக் கமிட்டி என்ன கூறியிருக்கிறதோ நாம் அறியோம், ஆனால் கோலாப்பூர் சம்பவத்தையும் அதன் விளைவுகளையும் ஆராய்ந்து பார்க்கும்போது, நமக்குத் தோன்றுவது இதுதான், இவ்விதமான சம்பவங்கள், நாடாள்வோருக்கு, இந்த முக்கியமான விஷயத்தைக் கவனப்படுத்தவேண்டும், ஜாதிப் பித்தம் ஒழிக்கப்பட்டாக வேண்டும் என்ற விஷயத்தைக் கவனப்படுத்த வேண்டும்.

கலவரம் செய்தவர்கள் உடந்தையாக இருந்தவர்கள் ஆகியோரைத் தண்டிப்பதன் மூலம் சட்டத்தின் சக்தியை நிலை நாட்டலாம்—மேற்கொண்டு இத்தகையபயங்கரப்பலாத்காரங்கள் எழாதபடியான மனப்பான்மையை உண்டாக்கலாம்—வீடுகள் தீப்பற்றி எரிந்தபோது, ஐயோ! என்று அழுத பார்ப்பனர்களின், மனதுக்குத் தேவையான அளவு திருப்தியும் மகிழ்ச்சியும், இனி இதுபோல ஏதும் நேரிடாது என்ற நம்பிக்கையும் ஏற்படுத்தலாம், ஆனால், இந்தநிலைமையை அடியோடு களைந்தெறிய இவைமட்டும்போதாது—ஜாதிப் பித்தம் ஒழிக்கப்பட்டாக வேண்டும்—எங்கும்— இனியேனும்! கோலாப்பூரில் மூண்ட தீ, கோல் கொண்டோருக்கு, ஜாதிப்பித்தத்தை அறவே ஒழித்தாக வேண்டும் என்ற உறுதியைத் தருதல் வேண்டும்.

✿

10-ம் பக்கத் தொடர்ச்சி

றன்றோ எண்ணுவர்—எண்ணிடின், தமிழைக்கைவிடத்தானே செய்வர்—தமிழின் தொன்மையும் இனிமையும், என்னுவது என்று எண்ணி ஏங்கினேன்.

* * *

வீடு திரும்பினேன், சர்க்கார் பஸ்ஸில். இரு இளைஞர்கள் — பார்ப்பனர்கள்— பேசிக்கொண்டிருந்தனர், என்பக்கம் அமர்ந்திருந்தவர்கள். ஒருவர் சொன்னார், இரவு எட்டுமணிக்கெல்லாம் நான் உன் வீட்டிற்கு வந்துவிடுகிறேன் என்று; மற்றவர் அதற்குச் சொன்னபதில், என்னை மீண்டும் விசாரத்திலாழ்த்தி விட்டது. I will take my கானா, and wait for you,—இது அவர்பேச்சு. நான் சாப்பிட்டுவிட்டு, உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன் என்று கூறுகிறார். மொழி, எவ்வழி சென்றுவிட்டது பாருங்கள்—ஆங்கிலம், இடையே ஒரு இந்திச்சொல், கானா—என்பது. இது, அறப்போர் செய்து இந்திநுழைவை நாம் தடுத்துக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்திலே உள்ள, பேச்சுமுறை! நாம் அறப்போர் தொடுக்காவிட்டால், கானா, என்ற ஒரு இந்திச்சொல்லுடன், அந்த நண்பர், திருப்தி அடைந்திருப்பார். மொழி, இப்படிப் பாழாகி வருகிறது—இந்தியின் நுழைவுவழியைத் தமிழர் அறப்போரிட்டுத் தடுக்காவிட்டால், மிகமிக விரைவிலே, தமிழ்மறையும், என்பதற்கு என்ன சந்தேகம்!

* * *

வீடுசென்றேன், விசாரத்தை மீண்டும் விரட்டும் சம்பவம். இருபது இளைஞர்கள் நின்றுகொண்டிருந்தனர்—பெரியார் பேசிக்கொண்டிருந்தார். "தம்பி! அவசரம் வேண்டாம். ஊருக்குச் சென்று இருங்கள் — தேவைப்படுகிறபோது வரலாம்!" என்கிறார் பெரியார். அவர்களோ திரும்பிப்போக மனமின்றி அங்கேயே நிற்கிறார்கள் —அறப்போரில்கலந்து கொள்ள வந்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள். மந்திரிகள் பேசுகிறார்களே பதவி பெற இப்படி எல்லாம் செய்கிறார்கள் என்று—அந்த இருபது இளைஞர்கள், எந்தப் பதவியை எண்ணிக்கொண்டு இவ்வளவு ஆர்வம் கொண்டிருக்கிறார்கள்! அமைச்சர்களின் பேச்சு, பச்சைப்புளுகு, என்பதை அந்த இளைஞர்களின் ஆர்வம் நன்கு விளக்கிற்று. விசாரம் விரட்டப்பட்டது. அறப்போர் தொடர்ந்து நடைபெறுகிறது—வெற்றியும் நம்மை நோக்கி விரைவில் வந்து தீரும், என்று 'சேதிகள்' சில பல வந்தவண்ணமும் உள்ளன!

●

IN THE COURT OF THE DISTRICT JUDGE OF CHINGLEPUT

S. C. O. P. 73/48

In the matter of the assets of the deceased Kanniah Naidu.

R. Gopal Naidu……Petitioner

VS

Ramasami Naidu & another…… Respondents

Notice is hereby given that the petitioner has filed the application for issue of a succession certificate for Rs. 1724-4-0 being the amount due on the life insurance policy of the deceased Kanniah naidu. Persons interested may appear in court on 11-11-48, the date of hearing.

M. Rajagopalan
Counsel for Petitioner

### கடமை

4-ம் பக்கத் தொடர்ச்சி

பட்டுக் காரியம் நடைபெறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அந்த நம்பிக்கை இப்போது நசித்துவருகிறது. காங்கிரசாட்சியிலே மக்களுக்குச் சலிப்பு வளருகிறது. இவர்கள் வந்தும் நமக்கு நன்மை இன்னும் ஏற்படவில்லையே! என்ற கவலை, பொதுமக்களிடம் வளர்ந்தபடி இருக்கிறது.

இங்கு, சட்டசபைக்குச் செல்லக் கூடிய நோக்கமும், ஆட்சிப்பீடம் ஏறி, மக்களின் நல்வாழ்வுக்காக இன்னின்ன வகையான திட்டங்களை நிறைவேற்றவேண்டும் என்றவேலைத் திட்டமும் கொண்ட ஒரு அரசியல் கட்சி இருந்தால், காங்கிரசாட்சியும் இவ்வளவு பொறுப்பற்ற முறையிலே போகாது, பொதுமக்களும், நாம் என்ன செய்வது—நாம் நம்பிவந்த காங்கிரஸ் நம்மை நட்டாற்றில் விடுகிறது, என்று குமுறிக் கொண்டிருக்க வேண்டிய நிலைவராது.

“உன்னால் முடியாவிட்டால், சற்றே விலகி இரு—அதோ அந்தக் கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தட்டும்” என்று கூறுவர்.

அந்த நிலை இல்லாததால், நமது காங்கிரஸ் தலைவர்கள், “எது செய்தால் என்ன! யார் கேட்கமுடியும்? சில, காந்துகள் கண்டிக்கலாம்—கண்டித்தால் என்ன—அலட்சியப் படுத்திவிடுவோம்—” என்று கருதிவிட முடிகிறது.

காந்துகள் தங்கள் கடமையை உணரவேண்டும் — ஆட்சி புரியும் கட்சி, நல்ல முறையிலே ஆட்சி செய்யவில்லை என்றால், திருத்த முனையவேண்டும்—முடியாது என்று தெரிந்தால், வேறு கட்சி அமைத்துப், பொதுமக்களுக்குப் பணியாற்றவேண்டும், பொறுப்புணர்ச்சியுடன்.

இதைச் செய்யாமல், அவ்வப்போது இந்தக் காந்துகள் ஆட்சியாளர்களைக் கண்டித்துப் பேசுவதால், உருவான பலன் ஏதும் விளையப் போவதில்லை.

எல்லா மக்களுமாகச் சேர்ந்து ஒரு நாட்டின் ஆட்சியைநடத்துவது முடியாத காரியம்; அதற்காக, எவனோ ஒருவன் ஏதோ ஒரு காரணத்தைக் கூறிக்கொண்டு, மன்னன் என்ற பதவியும் பெற்றுத், தன் இஷ்டப்படி ஆளுவதும், மக்களுக்கு உகந்ததல்ல; எனவேதான், ஜனநாயக முறை வகுக்கப்பட்டது; மக்கள், தங்களில் சிலரைத் தேர்ந்தெடுத்து, ஆட்சிக் காரியத்தை நடத்தும்படி அதிகாரம் கொடுத்து அனுப்பும் திட்டம்வகுக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், கொடுக்கப்பட்ட அதிகாரத்தைத் தக்கவிதத்திலும், நல்ல பலன் ஏற்படும்படியும் பயன்படுத்த வேண்டும்; இல்லையானால் அவர்கள், தங்களைத் தேர்ந்தெடுத்தனுப்பியவர்களுக்குத் துரோகம் செய்தவராவர். முடியாட்சியின்போது, மன்னன் எதேச்சாதிகாரமாக நடந்துகொள்வதால் ஏற்படும் கேட்டினைவிட, குடியாட்சி முறையிலே, துரோகிகள் கிளம்புவதால் வரும் கேடு, கொடுமை மிகுந்ததாகும்.

கொடுங்கோல் கொண்ட மன்னனைப்பற்றி எண்ணும்போதாவது, அவன் அரசன்-ஆண்டவன் அவனை ஆளப் பிறப்பித்து விட்டான்—நாம் என்ன செய்வது, என்று ஒரு வகையிலே மனதைத் தேற்றிக்கொள்ள வழிஉண்டு; குடியாட்சியின்போது, குடிலர்கள் கிளம்பினால், மக்களின் மனக்குமுறலுக்குச் சுலபத்திலே சாந்தி கிடைக்க வழி கிடையாது, நம்மைப்போன்றவன்—நம்மால் பதவியில் அமர்த்தப்பட்டவன்—நமக்கு ஊழியம் செய்வதாக வாக்குறுதி கூறி அந்தப்பதவிக்குச் சென்றவன், அப்படிப்பட்டவன், நமக்குக் கொடுத்த வாக்குறுதியை மறந்து, நம்மைத் துச்சமென்று எண்ணி, தான் ஏதோ நம்மை விட உயர்ந்தவன் போல நடந்துகொள்கிறானே, படிக்கட்டு ஏறிவந்து பல்லைக்காட்டி, கைகூப்பி நின்று, ஓட்டு வாங்கினதை மறந்தே விட்டானே, என்று எண்ணும்போது, மக்களின் மனவேதனை அதிகமாகத்தான் இருக்கும்.

அதிலும், காந்துகள், கண்டிக்கக் கேட்கும்போது, இந்தவேதனை, மும்மடங்கு அதிகமாகத்தானே இருந்துதீரும்.

காந்துகள், கண்டிப்பதோடுதமது கடமை முடிந்துவிட்டதாகக் கருதுகிறார்கள்—மற்றப்பலர், அதைத்தான் சொல்வானேன், நாமாகஅகப்பட்டுக் கொண்டு விழிப்பானேன் என்றும் இருந்துவிடுகிறார்கள். பெரும்பாலான சட்டசபை அங்கத்தினர்கள், தேர்தலின்போதுதான் மக்களின் கண்முன் தெரிந்தார்கள், இப்போது, அவர்களின் தரிசனம் மிகமிகச் சிரமமானதாகிவிட்டது.

எத்தனை எம். எல். ஏ.க்கள், தாம் வெற்றிபெற்ற தொகுதியிலே இந்த மூன்றாண்டுகளில், மக்களிடம் சென்று, ஓட் அளித்தவர்களைக் கண்டு, சட்டசபையிலே, தான் செய்த வேலைகள் இன்னின்னவை என்று கூறியிருக்கிறார்கள்? பலர், வாய்திறக்கவே இல்லை—வாய்திறந்த சிலரும், வழக்கமாகப் பாடி வந்த தேசியப் பஜனையைப் பாடிவிட்டு அமருகிறார்களே தவிர, சட்டசபையிலே, தாங்கள் செய்த காரியம் இவையிவை, என்று, எடுத்துக் கூறினதில்லை, பலர், சட்டசபைக்குச் செல்வதிலேயே அக்கரைகாட்டுவதுமில்லை.—போகிற பலரும், ஏதோ, கடனுக்குச் செல்லும் கனவான்களாக இருக்கிறார்களே தவிர, காரியமாற்றும் கருத்துள்ளவர்களாக இல்லை.

சட்டசபை நடவடிக்கைகளில் கலந்து கொண்டார்கள், என்று, குறிப்பிட்ட சிலருடைய பெயர்களைத்தான் காணமுடிகிறது—மற்றவர்கள், மௌனசாமிகளாக உள்ளனர்!

சட்டசபையிலே கூடப்பேசவேண்டாம், சட்டசபைக் கட்சிக் கூட்டம் நடைபெறுகிறதே, அங்கு ஏதாவது, அவசியமான, அறிவுக்குப் பொருத்தமான ஆலோசனைகள், திட்டங்கள், சட்டங்கள், ஆகியவற்றைப் பற்றிப் பேசுகிறார்களா, என்று பார்த்தால், மிக மிகப் பெரும்பாலோர், விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய சிலர் தவிர, மற்றவர்கள், அங்கேயும், கண்மூடி மௌனியாகிவிடுகின்றனர். இதுவா, பொது மக்களின் பிரதிநிதிகளின் பொறுப்புணர்ச்சி?

சட்டசபையிலே தூங்கலாமா, எந்த அளவிலும் முறையிலும் தூங்கலாம், என்பது பற்றிச் சட்டசபையிலே பேசும் அளவுக்கு, சுறுசுறுப்பு அங்கு! இப்படிப்பட்டவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பினோமே என்பதை எண்ணினால் வெட்கப்பட வேண்டாமா?

சட்டசபையின் நடவடிக்கையின் முறையின்படி, ஒரு அங்கத்தினர், 60 கூட்டங்களுக்குமேல், சட்டசபைக் கூட்டத்துக்கே போகாமலிருந்துவிட்டால், அவரை நீக்கி விடலாம். சட்டசபையில் அங்கம் வகிப்பது பொறுப்புடன் கூடியது என்

பதை விளக்க ஏற்பட்டது இந்த விதி.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், என்பவர், இதுவரை, சட்டசபையை எட்டிப்பார்க்கவே இல்லையாம்! சட்டசபை நடவடிக்கைகள் நடைபெற்ற இருநூறு கூட்டங்களுக்கு போகவில்லை. ஏன்? காரணம் கூறப்படவுமில்லை — கண்டுபிடிக்கப் படவுமில்லை! 'உடல்நலம் இல்லையோ அவருக்கு,' என்று ஒரு மெம்பர் கேள்வி கேட்டதற்கு, சபைத்தலைவர் —உடல் நலம் நன்றாகத்தான் இருக்கிறது—அவர் பல கிராமப் பகுதிகளுக்குச் சென்று பிரசாரம் கூடச் செய்துகொண்டும் இருக்கிறாராம்— என்று பதிலளித்தார்

பசும்பொன்தேவர், பொதுவாழ்க்கையிலே, ஒருகுறிப்பிட்ட செல்வாக்கான இடம் பெற்றவர்—காங்கிரஸ் கட்சியிலே தீவிரவாதி என்பார்கள்-நன்றாகப் பேசக்கூடியவர். அப்படிப் பட்டவர் இந்தச் சட்டசபைக் கூட்டத்தை, எட்டி என்று எண்ணினாரோ, அல்லது அங்கு செல்வது வெட்டிவேலை என்று கருதினாரோ, வரவே இல்லை, இருநூறு கூட்டங்கள்! அறுபது ஆனாலும், அவரைக் கேட்டிருக்க வேண்டும்—விளக்கம் கூறச்செய்திருக்க வேண்டும்—நீக்கியிருக்க வேண்டும். அவ்விதம் எதும் செய்யவில்லை. இருநூறு கூட்டங்களுக்கு மேல் வராமலேயே அவர் இருந்திருக்கிறார், கேள்வி இல்லை, முறை இல்லை!

கடைசியாக, இப்போது அவரை, நீக்கிவிட்டனர்—அந்தத் தொகுதிக்குத் தேர்தலும் நடைபெற இருக்கிறது.

சட்டசபை நடவடிக்கையிலே எவ்வளவு பொறுப்புணர்ச்சி இருக்கிறது என்பதற்குச்சரியான எடுத்துக் காட்டல்லவா இது! பசும்பொன்னார், சட்டசபை வேலையில் துளியும் அக்கரை காட்டாமலிருந்தாரேயொழிய, சட்டசபை மெம்பர்களுக்குத் தரப்படும் சம்பளத்தை மட்டும், தவறாமல் பெற்றுக்கொண்டு வந்திருக்கிறார், என்றுகூறுகிறார்கள். இது நியாயமா! ஏன் அவர் வாங்கினார்? எப்படி இவர்கள் கொடுத்தனர்?

சம்பளத்தை மட்டும் வாங்கிக் கொண்டு இருக்கிறீர்கள், சட்டசபைக்கும் வருவது காணோம், இது சரியல்லவே—என்று சர்க்கார் கூறியிருக்கவேண்டாமா? யாருக்கும், பொறுப்புணர்ச்சி இருந்ததாகவே தெரியக்காணோம். இப்படி இருக்கிறது இலட்சணம்!

சட்டசபைக்குப் போகாமலேயே சம்பளத்தைப் பெற்றுக்கொண்டீரே பசும் பொன்னாரே! சரியா இது? என்று அவரைக் கேட்டால், ஒரு சமயம் அவர், "சட்டசபைக்குப் போகிறவர்கள் மட்டும் அங்கு என்னப்பா சாதித்து விடுகிறார்கள், சம்பளம் பெற! அங்கு போய்ப் பலர், குறட்டை கிளம்பாதபடி தூங்குவதற்குப் பழகிக் கொள்கிறார்கள்; இதற்கு அவர்களுக்குச் சம்பளம் தரும்போது, எனக்குக்கொடுத்தால் என்ன?" என்றுகேட்பார் போலும்!

அப்படிக் கேட்டாலும், நாம் அதை அடியோடு, தவறு என்று தள்ளிவிட முடியாது.

சட்டசபையிலே, பலதடவை, (கோரம் இல்லை) போதுமான எண்ணிக்கை இல்லை என்ற புகார் கிளம்புகிறது—தீர்மானங்களைக் குறித்து ஓட் எடுக்கப்படும்போது மெம்பர்கள் இருப்பதில்லை என்ற புகார் கிளம்புகிறது. இவ்விதமான நிலையிலா, சட்டசபை இருப்பது?

சட்டசபையிலே நிலைமை இப்படி! ஓட்டர்களிடம் செல்லுவதோ கிடையாது! ஆட்சியாளர்களின் போக்குப் பொதுமக்களுக்கு ஊறு செய்கிறது என்று கண்டிக்கும் காரதுகளோ, பேசுவதோடு சரி. இந்நிலையில் இருக்கிறது, நாடாளும் இலட்சணம்! சட்டசபையிலே இடம் பெறத்தக்க முறையிலே ஒரு எதிர்க்கட்சி இருந்தால், இப்படியா இருக்கும்!இன்னேரம் சந்தி சிரித்திருக்குமே!!

பொதுமக்கள், இப்படித் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்ளும் சட்டசபையினரை,என்ன செய்யமுடியும்? அடுத்த தேர்தல் வரையிலே, இவர்கள்தானே இருப்பார்கள் — இவர்களைப் பொதுமக்களால் இப்போது நீக்கவும்முடியாதே —இவர்களை மிரட்டி வேலைவாங்க ஒரு எதிர்க்கட்சி இல்லையே, என்ன செய்வது என்று கேட்பார்கள் பலர்.

இதுபற்றி, காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்கு உழைத்த உண்மை ஊழியர்கள்சிந்தித்து, சற்றுக்கடமையிலே கவலை கொண்டால், அவர்களைத் திருத்தமுடியும்; பொது மக்களைத் திரட்டவேண்டும் அதற்கு.

சட்டசபையிலேசென்று அமர்ந்து விட்டதாலேயே, அடுத்த தேர்தல் வரையிலே, அவர்களையாரும்அசைக்கவே முடியாது, என்று எண்ணத் தேவையில்லை. தேர்தல் தவிர, வேறு ஆயிரம் வழிகள் உண்டு அவர்களைத் திருத்த. பொதுமக்களின் நம்பிக்கையை அந்த மெம்பர்கள் இழந்து விட்டனர் என்பதை அவர்கள் உணரும்படி செய்யமுடியும் —கண்டனக் கூட்டங்கள்மூலம்—மகஜர்கள்மூலம் —பேட்டி கண்டு பேசுவதன்மூலம்.

உமது கடமையைச் செய்யத் தவறிவிட்டீர்—உமக்குச் சட்டசபை வேலையிலே அக்கரையும் காணோம், திறமை இருப்பதாகவும் தெரியவில்லை—நமது தொகுதியின் தேவைகளைப்பற்றி, இதுவரை, சட்டசபையிலே, பேசக்கூட இல்லை—இப்படிப் பட்ட உம்மை, எமது பிரதிநிதியாகக்கொண்டு, நாங்கள் என்ன பலனை அடையமுடியும்? ஆகவே, தயவு செய்து, ராஜினாமாச் செய்துவிடுங்கள்—என்று விளக்கிட மக்கள்முன் வரவேண்டும்.

அவ்வப்போது நாட்டிலேபலபிரச்னைகள் தோன்றி மக்களை அல்லற் படுத்துகின்றன — சட்டசபை மெம்பர்கள் இவைகளை எடுத்துக் காட்டிப்பரிகாரம் தேடக்கடமைப் பட்டவர்கள் — அதற்காகவே அவர்களை அனுப்பியிருக்கிறோம். ஆனால் அவர்கள் இதுவரை அவ்விதம் செய்யவில்லை.

ஜமீன் ஒழிப்புச் சட்டத்திலே, இனாம்களையும் சேர்த்திருந்த பொழுது, வைத்யநாதஐயரும், வரதாச்சாரியாரும், எவ்வளவு வாதாடினார்கள், வீரத்தோடு பேசினார்கள், மந்திரிகளை மிரட்டினார்கள், சர்க்காருக்கே சாபம் தருபவர்கள்போல ஆவேசம் ஆடினார்கள். அவர்கள், இனாம்தார்களின் பிரதிநிதிகளா? இல்லை! அவர்களின் தொகுதி அப்படிப்பட்டதா? அதுவும் இல்லை!எனினும், இனாம்தார்களிலே மிக மிகப் பெரும்பாலோர், பார்ப்பனர், என்றதால், இனாம்தார்களுக்கு ஆபத்து என்ற உடனே, இவர்கள் எவ்வளவு அக்கரை எடுத்துக்கொண்டனர்?

எத்தனையோ தொகுதிகளிலே இருந்து போயிருக்கிறார்களே 'புண்யவான்கள்' அவர்கள், இந்த அக்கரையிலே ஆயிரத்திலோர் பாகம், தமது தொகுதிபற்றிக் காட்டினரா?

பாலமில்லாத ஆறுகள் — தேக்கமில்லாத காட்டு வெள்ளங்கள் —

மழையேகாணாத கரம்புகள், உள்ள தொகுதிகளின் பிரதிநிதிகள் போயிருக்கிறார்கள்—பேசுகிறார்களா அவை பற்றி? கிடையாது! பெரும்பாலான மக்கள் நெசவாளர்களாகவே உள்ள, தொகுதிகளிலிருந்து போயிருக்கும் பிரதிநிதிகள், நெசவாளரின் நிலை மிக மிகக் கேவலமானதாகி வருகிறதே, இதுபற்றிப் பேசினரா? கிடையாது! இப்படிப்பட்டவர்களை, ஏன், இன்னமும் பொதுமக்கள், சுமந்துகொண்டிருக்கவேண்டும் — எடுத்துச் சொல்வதுதானே, உண்மை நாங்கள் இனியும் எங்கள் பிரதிநிதியாகக் கொள்ளமாட்டோம் என்று. முடியாதா? வேறு கட்சிக்காரர் முன்னின்று செய்ய வேண்டாம்—அந்தப் பிரதிநிதியின் கட்சியினரிலே, நேர்மையில் நாட்டமுடையவர்கள் செய்யலாமல்லவா? அந்த மெம்பர், சட்டசபைக் கூட்டத்துக்குப் புறப்படும்போது பொதுமக்கள், ஒரு குறிப்பிட்ட அளவு, ஊர்வலமாக அவர் இல்லம்சென்று, தங்கள்குறைகளைக் கூறி, இவைபற்றிச் சட்டசபையிலே எடுத்துச் சொல்லிப், பரிகாரம் பெற்றுவாரும் என்று வலியுறுத்தி, அனுப்பலாமே! சட்டத்துக்குமாறானதுமல்ல-கட்சிக்குவிரோதமாகாது — ஜனநாயகமும் பிழைக்குமே — செய்தனரா?

எப்படித்தான் தெரிவது, சட்டசபை மெம்பர்களுக்கு, தங்கள் கடமையைச் சரிவரச்செய்யாவிட்டால் ஓட் அளித்தவர்கள், கேள்வி கேட்பார்கள் என்பது.

30-ம் நெம்பர் நூல் வேண்டும்! 3000 புதுத்தறிக்கு அனுமதி வேண்டும்! கூலிநிர்ணயம்வேண்டும்! பாலாற்றுக்குப் பாலம் வேண்டும்! பஞ்சநிவாரணக்கடை வேண்டும்! கைலி ஏற்றுமதி அனுமதிவேண்டும்! கையிருப்புச்சரக்கினமேல் கடன் தர வேண்டும்! புழுத்தலில்லாத அரிசி வேண்டும்!—என்று இப்படி அவ்வப்போது, ஏற்படும் குறைபாடுகளைப் போக்கிக்கொள்ளப், பரிகாரங்களைத் தேட, மேலே உள்ள கோரிக்கைகளை 'அட்டைகளில்' பொறித்துக் கொண்டு, அமைதியானமுறையிலே ஒரு ஊர்வலமாகச்சென்று, அந்தந்த வட்டாரத்து M. L. A.க்களை, மக்கள் காண்பது என்று முறை இருந்தால், இந்த M.L.A.க்கள் இவ்வளவு 'ஏனோதானோ' என்று இருந்துவிட முடியுமா? இந்தக்காரியத்தைக் கம்யூனிஸ்டுகள் முன்னின்று நடத்தினால் அவர்களை ரஷியாவின் கூலிகள் என்று கூறிக்கண்டித்து விடுவது— திராவிடர் கழகம் நடத்தினால்,பார்ப்பனத்துவேஷிகள் என்றுபழிசுமத்தி விடுவது, என்று 'வித்தை' தெரிந்து வைத்துக்கொண்டார்கள். காங்கிரசிலே உள்ள சட்டசபை மெம்பர்கள் தவிர மற்றவர்கள் இதைச்செய்யலாமே—பழியும் இராது — பலனும் ஏற்படுமே! செய்தனரா? செய்வரா?

பொதுமக்களின், நம்பிக்கைக்குப் பாத்திரராக இருந்தாக வேண்டும் என்ற பயமும் பொறுப்புணர்ச்சியும், சட்டசபை மெம்பர்களுக்கு ஏற்பட்டாகவேண்டும்.

ராஜபாளையம் தொகுதிக்கு மெம்பரும், முன்னாள் மந்திரியாக இருந்தவருமாகிய குமாரசாமி ராஜா என்பவர், திடீரென்று ஓர் நாள், "நான் சட்டசபை மெம்பர்பதவியை விட்டுவிடுகிறேன் — ஏனெனில் நான் பொதுமக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டேன்" என்றுபத்திரிகைகளிலே வெளியிட்டார். உடனே அவருடைய நண்பர்கள் சிலர், "ராஜா! ராஜா! இப்படியும் செய்யலாமா?" என்று கேட்டுக்கொண்டனர்—உடனே அவர், தமது ராஜிநாமாவை வாபஸ் வாங்கிக்கொண்டார்—இப்போது அவர் சட்டசபை மெம்பராக இருக்கிறார்.

பொதுமக்களின் உரிமையை எவ்வளவு கேலிக் கூத்தாக்குகிறார்கள் என்பதைப் பாருங்கள்!

"நான் பொதுமக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டேன்" என்று குமாரசாமி ராஜா, கூறினாரே, அவர் மீண்டும் சட்டசபை மெம்பராக இருக்கவேண்டுமானால், பொதுஜன நம்பிக்கையைப் பெறவேண்டாமா? பெற்றாரா? பெற முயற்சித்தாரா? இல்லை! நண்பர்கள் கேட்டுக்கொண்டார்களாம், உடனே அவரும், சரி என்று, ராஜிநாமாவை வாபஸ் வாங்கிக்கொண்டாராம்! இதுவா, பொறுப்புணர்ச்சி!

பொதுமக்களின் நம்பிக்கை, இந்தச் சில நண்பர்களின் வேண்டுகோளிலேயா புதைந்திருக்கிறது! குமாரசாமிராஜா, குணவான்— அவரே இப்படி நடந்து கொள்கிறார், என்றால், கெஞ்சிக்கூத்தாடி, காங்கிரஸ் கமிட்டியின் தயவுபெற்று, சட்டசபை மெம்பரானவர்கள் பலர் இருக்கிறார்களே, அவர்களின் போக்கைக் கூறவா வேண்டும்!

சட்டசபையை எட்டிப்பாராத முத்துக்கள், சென்று குறட்டைவிடாது தூங்கும் குணக்குன்றுகள், ராஜிநாமா நாடகம் நடத்தும் குமாரசாமி ராஜாக்கள், குறைகூறும் காந்துகள், இப்படி இருக்கிறார்கள், பொதுமக்களின் ஓட்டுகளைப் பெற்றுச் சென்றவர்கள்! இதுவா சட்டசபை?

16-ம் பக்கத் தொடர்ச்சி

ராமகிருஷ்ணப் பிள்ளை என்பவரின் 'அஸ்தி'யைப் புதைத்து ஒரு நினைவுக்குறி எழுப்ப, திருவனந்தபுரத்திலே, இரண்டு செண்டு, நிலம், இனாமாகத்தரவேண்டுமென்று, பட்டம்தாணுப்பிள்ளை, நிர்வாகத்திலிருக்கையில் கேட்டனராம் — அவர் ஏதேதோ காரணம் கூறி, நிலம் தர மறுத்தாராம்! தியாகிக்கு, புதைவிடம் தரக்கூட மறுத்தாரே இந்தப் பட்டம், இவரை எப்படி நாங்கள் இனி நம்புவது என்று கேட்டிருக்கிறார், ஓர் திருவாங்கூர்த் தோழர்.

ஆக, பட்டம்தாணுப் பிள்ளையின் வீழ்ச்சிக்காகக் கூறப்படும் காரணங்களிலே, குறிப்பிடத்தக்கதாகவும், முக்கியமானதாகவும் தெரிவது, சர். சி. பி. யின் ஆட்சிக்காலத்தின்ஊழல்களையும் அக்ரமங்களையும், அம்பலப்படுத்த அவர் இணங்காததுதான், என்று எண்ணுகிறோம். பாபம் சி.பி. அங்கு இருக்கும்போதுதான், இடர் விளைவித்தார் என்றால், சமஸ்தானத்தைவிட்டு வெளி ஏறியபிறகும், அவரால் தொல்லை ஏற்படத்தான் செய்கிறது!

ஏழுமாதங்களுக்கு முன்பு பட்டம் நிர்வாகத்தலைவரானபோது எல்லோருக்கும் அவரிடம் பற்றும், மதிப்பும் நம்பிக்கையும் இருந்தது. அவரை வாழ்த்தி வரவேற்றனர். ஆனால், இப்போது, அவருடைய நிர்வாகம் ஊழலானது என்றும், அவரிடம் நம்பிக்கை இல்லை என்றும் மிகப் பெரும்பாலார், தெரிவித்துவிட்டனர்! ஏழேமாதங்களிலே, பட்டம், தூக்கிவைக்கப்பட்டுக் கீழேயும் தள்ளப்பட்டுவிட்டார். இதற்கிடையே, அவர் போட்டாடிய புலிவேடமும் சாமான்யமல்ல! தமிழர்மீது போர் தொடுத்தார் — தொழிலாளர்மீது போர்-மாணவர்மீது போர்-இப்படிப் போர்க்கோலமே பூண்டிருந்தார்.

(7-ம் பக்கம் பார்க்க)

# ★ பட்டம்—ஒருபாடம்! ★

திருவாங்கூர் சமஸ்தான மக்களை அடக்க, டயர் போல் நடந்து கொண்டார் சர். சி. பி. இராமசாமி ஐயர்.

போலீசையும் ராணுவத்தையும் ஏவி மனித வேட்டை ஆடினார்.

அதிகாரிகள் அவருடைய ஹிட்லர் ஆட்சிக்கு அரணாக விளங்கி, காடுமேல், இவர் ஆளும் நாட்டை விட என்று மக்கள் கதறும் நிலையை உண்டாக்கினர்.

அவருடைய அடக்குமுறைக் கொடுமைக்கு ஆளான போதிலும், உரிமை உணர்ச்சியை உருக்குலைய விடாமல் பாதுகாத்தனர் உத்தமர் பலர்.

தடியடியும், குண்டு வீச்சும் தாக்கிய போது, சிறையில் கொடுமை பல நிகழ்ந்தபோது, உரிமைப் போரிட்ட உத்தமர்கள், என்ன விலை கொடுத்தேனும் விடுதலையைப் பெறுவது என்று சூள் உரைத்ததுடன், விடுதலை கிடைத்ததும், கொடுங்கோலாட்சி புரியும் சர். சி. பி. யின் புகழை நிலைநாட்டுவதற்காக, பொதுமக்கள் பணத்தால் அமைக்கப் பட்ட அவருடைய சிலைகள், நினைவுக்குறிகள் ஆகியவற்றை அழித்தாக வேண்டும் என்றும் சூள் உரைத்தனர்.

மனித வேட்டையாடிடும் அதிகாரிகளை விசாரித்துத் தண்டனை தருவோம் என்றும் சூள் உரைத்தனர்.

சர். சி. பி. யின், பொருளாதாரத் திருவிளையாடல்களான, பல புதிய கம்பெனிகளின் யோக்யதைகளை விசாரணை செய்து அம்பலப் படுத்துவோம் என்றும் கூறினர். பொதுவாகவே, சர். சி. பி. யின் நிர்வாகத்தின் வேதனை தரும் விளைவுகளைப் பாரறியச் செய்தாகவேண்டும் என்றும் தீர்மானித்தனர்.

உரிமைப் போர், வெற்றிகரமாக முடிந்தது; விடுதலை கிடைத்தது; சி. பி. ஆட்சியும் தொலைந்தது; பட்டம் தாணுப்பிள்ளை ஆட்சிப்பீடம் ஏறினார். மகிழ்ச்சி பெற்றனர் மக்கள் — சூளுரைகளை நிறைவேற்ற வேண்டுமெனத் துடித்தனர். ஆனால், பட்டம் தாணுப்பிள்ளை அதற்கு இடங் கொடுக்கவில்லை.

அவர், தமது ராஜீநாமாவை விளக்கி, 'இந்து' இதழில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தக் குறிப்புக் காணப்படுகிறது.

"முன்னாள் திவானுக்காக எழுப்பப்பட்ட சிலைகளையும், நினைவுக் குறிகளையும், நீக்கியாகவேண்டும்; அவர் பெயர் சூட்டப்பட்டிருக்கும் அமைப்புகளுக்கெல்லாம் வேறு பெயரிடவேண்டும், என்று கூறினர்" என்று பட்டம் தாணுப்பிள்ளை குறிப்பிடுகிறார்.

நீலன் சிலையை நீக்கியாகவேண்டும் என்ற உணர்ச்சி நமது பகுதியிலும், டயரின் ஞாபகக்குறிப்புகள் அகற்றப் படவேண்டும் என்று பாஞ்சாலப் பகுதியிலும், இயற்கையாக எண்ணம் எழுந்ததுபோல, திருவாங்கூர் மக்களுக்கு சர். சி. பி. யின் சிலைகளை நீக்கியாகவேண்டும் என்ற உணர்ச்சி ஏற்பட்டது. அவர்கள் அவரால் பட்ட அவதி அப்படிப் பட்டது.

பட்டம் தாணுப்பிள்ளை இதற்கு, சாக்குப் போக்குகள் கூறலானார்— மட்டு மரியாதையைக் கவனிக்க வேண்டாமா என்று வாதாடலானார்—ஏன் திருவாங்கூர் டயருக்காக, பட்டம் இவ்வளவு பரிவு காட்டவேண்டும்?

திருவாங்கூரில், சர். சி. பி. திவானாக இருந்தபோது, துவக்கப்பட்ட கம்பெனிகள் பற்றியும், பணச் செலவு வகைகள் பற்றியும் ஒரு பகிரங்கவிசாரணைநடத்தவேண்டும்என்று கூறினர்—நான் பகிரங்க விசாரணை கூடாது என்று கூறினேன் என்று பட்டம் தாணுப்பிள்ளையே தமது அறிக்கையில் குறிப்பிடுகிறார்.

ஏன், பகிரங்க விசாரணை நடத்தக் கூடாது? சர். சி. பி. யின் பத்தினித்தனத்துக்குப் பங்கம் நேரிடக் கூடாது என்ற எண்ணமா? ஏன், மாஜி திவானிடம் அவ்வளவு பரிவு? திருவாங்கூர் மக்கள், இதற்கான காரணங்களை அறிய ஆவல் கொள்ள மாட்டார்களா!

பட்டம் தாணுப்பிள்ளை தமது வீழ்ச்சிக்குக் காரணம், சமஸ்தானக் காங்கிரசிலே, முளைத்த, வகுப்பு வாதச் சூழ்ச்சிதான் என்று கூறுகிறார்.

சமஸ்தானக் காங்கிரசிலே உள்ள கிருஸ்தவர்களின் சூழ்ச்சியாலேயே, தன் வீழ்ச்சி ஏற்பட்டதுஎன்று கூறுகிறார்.

பொது எதிரியுடன் போராடிக் கொண்டிருந்த போது, இந்த வகுப்பு வாதம் தலைதூக்கவில்லை, ஆனால் அதிகாரம் கிடைத்த உடனே, வகுப்புவாதம் தலைவிரித்தாடி, என்னைக் கவிழ்த்துவிட்டது. புதிதாகப் பதவிக்கு வந்திருப்பவரும், கிருஸ்தவ வகுப்பு வாதிகளின் பாட்டுக்கு ஏற்ற தாளம் போடாவிட்டால், அவருக்கும், எனக்கு நேரிட்ட கதிதான் என்று எச்சரிக்கையும் செய்கிறார்.

புதிய மந்திரிசபை அமைத்துள்ள தோழர் நாராயண பிள்ளையோ, வகுப்புவாதமோ, சூழ்ச்சியோ, பட்டம் ராஜிநாமாவுக்குக் காரணமல்லவென்று, கூறுவதுடன், வகுப்பு வாதத்தை நான் அடியோடு வெறுக்கிறேன்—பொதுமக்கள் அந்தப் பீடையைக் களைந்தெறிய வேண்டும், என்றும் கூறுகிறார்.

வகுப்புவாதம் கூடாது என்றும் அதை ஒழிப்பதே என் வேலை என்றும், வீழ்ந்தவரும் வீரமாகக் கூறுகிறார், வந்திருப்பவரும் வீரமாகவே பேசுகிறார். இந்நிலையில், வகுப்பு வாதத்தைப்,பட்டம்,தன்பட்டம்பறி போனதற்குக் காரணமாகக் கூறிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை.

ஐக்யகேரளம், என்ற அமைப்பு விஷயத்தில் பட்டம் அவ்வளவாக அக்கரை காட்டவில்லை, புதியவருக்கு, அந்தத் திட்டத்திலே, மிகுந்த பிரேமை-இது ஒருகாரணம் பட்டத்தின் வீழ்ச்சிக்கு என்று கூறுகிறார்கள். இதையும் பட்டம்தாணுப் பிள்ளை மறுக்கிறார். ஐக்கிய கேரளத் திட்டத்தை வானளாவப்புகழலாம், கூரைமீதேறிக் கூவலாம் அதுபற்றி, ஆனால் அதிலே உள்ள சிக்கல்கள், நடை முறையில் இறங்கும்போது தெரியும் என்று அவர் கூறுகிறார்.

திருவாங்கூர் சமஸ்தானப் போராட்டத்திலே தீவிரப்பங்கெடுத்துக்கொண்டவரும், சமஸ்தானத்தால், நாடு கடத்தப்பட்டவருமான

(15-ம்பக்கம் பார்க்க)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.